a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

மே 2016 May | இதழ் 304 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION

1991 26th Year 2016









சமூகத்துடன்
இணைந்த
வளர்ச்சி
ஸ்தாபிதம்-1991

Growing
with the
Community
ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**ISSN 1206-0585**

**ஆரம்பம்**
பெப்ரவரி 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**தொலைபேசி**
**416 920 9250**
**தொலைநகல்**
416 921 6576

**மின்னஞ்சல்**
**tamilsinfo@sympatico.ca**

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

**வெளியீடு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**முதன்மை ஆசிரியர்**
திரு எஸ். திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
றஞ்சி திரு

**உதவி ஆசிரியர் & தயாரிப்பு முகாமையாளர்**
சசி பத்மநாதன்

**உதவி ஆசிரியர்கள்**
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

**முகாமையாளர்**
ஆர். ஆர். ராஜ்குமார்

**விநியோக இணைப்பாளர்**
இ. சிவலிங்கம்

**பொதுமக்கள் தொடர்பு**
என். குமாரதாஸன்
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன் கிறாஃப்

**மாதாந்தம்**
5000 பிரதிகள்

**ஆண்டு மலர்**
6000 பிரதிகள்

*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

# நம்பிக்கை இழக்கும் நம்பிக்கை!

ஒன்ராறியோவில் இயங்கும் விசேட விசாரணைப் பிரிவின் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான பல்வேறு கேள்விகள் இப்போது பரவலாக எழுப்பப்பட்டு வருவதை அவதானிக்கலாம்.

இங்கு வெளிவரும் அனைத்து மைய ஊடகங்களும் இது தொடர்பான தமது கருத்துகளையும் ஆலோசனைகளையும் தொடர்ச்சியாக வெளியிட்டு வருவதால், மக்கள் மன்றில் விசேட விசாரணைப் பிரிவு அறிக்கைகள் தொடர்பான அபிப்பிராயம் 'கொதிநிலை'க்கு வந்துள்ளது.

ஒன்ராறியோ மாகாண அரச சபையில் முதல்வர் கத்லின் வின் சில உறுதிமொழிகளை வழங்கும் கட்டாயம் இதனால் ஏற்பட்டதையடுத்து, விசாரணை அறிக்கை கடந்த மாத இறுதி நாளில் வெளியானது.

இந்த மாகாணத்திலுள்ள நகரப் பொலிசார், மற்றும் ஒன்ராறியோ பொலிசார் (OPP) அவ்வப்போது மேற்கொள்ளும் தாக்குதல்கள் அல்லது சூட்டுச் சம்பவங்களில் எவராவது பாதிக்கப்படின் (காயமடைதல் அல்லது மரணித்தல்) அதனைச் சுயாதீனமாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கவே இந்த விசேட விசாரணைப் பிரிவு (Special Investigation Unit - SIU) உருவாக்கப்பட்டது.

இவர்களின் விசாரணை அறிக்கை அல்லது கண்டிபிடிப்பு எனப்படுவது எப்போதும் இரகசியமாகவே வைத்திருக்கப்படுவதாலும், அனேகமான விசாரணைகளின் முடிவு தாக்குதல் நடத்தியவர்களைக் குற்றமற்றவர் - களாகவே தெரிவித்துள்ளதாக வெளியில் கூறப்படுவதாலும் இப்போது இவ்விவகாரம் ஊதிப்பெருத்துள்ளது.

இந்தாண்டு ஜுலை மாதத்தில் ரொறன்ரோவில் அன்ட்றூ லொக்கு (45) எனப்படும் கறுப்பினத்தவர், அவர் வசிக்கும் மாடிமனைக குடியிருப்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். கொலையுண்ட லொக்கு மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதும், அதற்கான சிகிச்சை பெற்று வந்தவர் என்பதும் சந்கேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் இவ்வகையான பல மரணங்களுக்குப் பொலிசார் காரணமாகவிருந்துள்ளதாகக் கூறப்பட்டிருப்பினும், அவர்களை அடையாளம் காட்டி தண்டனைக்குட்படுத்த விசேட விசாரணைப் பிரிவு அறிக்கைகள் உதவவில்லை என்ற குற்றச்சாட்டு ஒரு தொடர்கதையாகும்.

இப்போது அன்ட்றூ லொக்கு சம்பந்தமான விசாரணை அறிக்கையும் பொலிசாரைக் குற்றமற்றவர்களாகவே காட்டியுள்ளது. லொக்கு என்ற அந்த நபர் பொலிசாரை நோக்கி சுத்தியல் ஒன்றுடன் நெருங்கியபோது, தமக்கு உயிரபாயம் கருதி பொலிஸார் அவரைச் சுட்டதாக இந்த அறிக்கை கூறுகிறது. ஆனால் அக்கட்டிடத்தில் வசிக்கும் நேரில் கண்டவர்கள் தெரிவித்த தகவலில் அப்படியானதாக இல்லை.

ஆனாலும், இந்தச் சூட்டுச் சம்பவம் 'சட்டப்படி நியாயமானது' (legally justified) என்று விசாரணை அறிக்கை சொல்கிறது. பல பக்கங்கள் நீக்கப்பட்டதாகவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதை 'Heavily-redacted report released' என்று ஒரு ஆங்கில ஊடகம் ஒன்று சுட்டியுள்ளது.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

பொலிசாரினதும், விசேட விசாரணைப் பிரிவினதும் செயற்பாடுகளிலும் விசாரணைகளிலும் போதிய வெளிப்படைத்தன்மை வேண்டுமென்று பலரும் கோருவதில் நியாயம் இருப்பதாகவே தெரிகிறது.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**ISSN 1206-0585**

**Established**
February 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojoni Kumaradasan

**Manager**
R. R. Rajkumar

**Circulation Coordinator**
R. Sivalingam

**Public Relation**
N. Kumaradasan
P. Sivasubramaniam
Pon. Sivakumaran

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

## ஸ்காபரோ - றூஜ்றிவர் இடைத்தேர்தலில் தமிழர்கள்





ஒன்ராறியோ மாகாண சபையின் ஸ்காபரோ - றூஜ்றிவர் தொகுதிக்கான இடைத்தேர்தல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறலாமெனத் தெரியவருகின்றது.

இத்தொகுதியின் மாகாண சபை உறுப்பினராகப் பல வருடங்களிருந்த பாஸ் பல்கிசுன் கடந்த மார்ச் மாதம் திடீரெனக் காரணம் எதுவும் கூறாது பதவி விலகியதால் இங்கு புதிய உறுப்பினரைத் தெரிவதற்கு இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இதே தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக என். டி. பி. சார்பில் ஐந்தாண்டுகள் பதவி வகித்த ராதிகா சிற்சபைஈசன், இந்த இடைத்தேர்தலில் ஒன்ராறியோ லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட விண்ணப்பம் செய்துள்ள தகவலை அவரே வெளியிட்டுள்ளார்.

ஆனால் கத்லின் வின் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒன்ராறியோ லிபரல் இது தொடர்பாக எந்த முடிவையும் இதுவரை அறிவிக்கவில்லை.

இலங்கைக்கு வெளியே நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான முதலாவது ஈழத்தமிழர் என்ற பெருமையைப் பெற்ற ராதிகா சிற்சபைஈசன், கடந்த வருட பொதுத் தேர்தலில் இதே தொகுதியில் 22 வீத வாக்குகளை மட்டுமே பெற்று லிபரலிடம் தோல்வியடைந்தார்.

அதேசமயம், நடைபெறப்போகும் இடைத்தேர்தலில் ஒன்ராறியோ என் டி. பி. சார்பில் நீதன் ஷண் போட்டியிடுவார் என்று கட்சியின் மேலிடத்தினர் தெரிவித்துள்ளனர்.

ரொறன்ரோ கல்விச் சபையின் உறுப்பினராகச் சில மாதங்களுக்கு முன்னரே தெரிவான நீதன் ஷண், அந்தப் பதவியிலிருந்தவாறே இடைத்தேர்தலில் போட்டியிடலாமெனத் தெரிகிறது.

பற்றிக் பிறவுணின் கன்சர்வேடிவ் கட்சியில் போட்டியிடப் பல தமிழர் முயன்று வருகின்றனராயினும் உறுதிபட எவரது பெயரும் வெளிவரவில்லை.

## ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவையான கனடிய சனத்தொகைக் கணக்கெடுப்பு இந்த மாதம் 2ம் திகதி ஆரம்பமானது!

### Why should everyone participate in the Census? Fact sheet is available in Tamil Language too.

In Canada, a census is taken every five years. Evey household will receive instructions about the census this month (May 2016). It is mandatory for all residents to participate in the census. This includes Canadian citizens, landed immigrants, refugee claimants, and people who hold a work or study permit. Completing the census is both a civic responsibility and legal requirement for all people living in Canada, Starting May 2, 2016, anyone can call census Help Line at 1.855.700.2016, Monday to Friday between 8 a.m to 8 p.m. or Saturday or Sunday from 8:30 a.m to 4:30 p.m.

கனடாவில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் குடிசன மதிப்பீடு என்று சொல்லப்படும் கணக்கெடுப்பு (Census) உத்தியோகபூர்வமாக இந்த மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் ஒவ்வொரு குடியிருப்புக்கும் குடிசனத்தொகை திணைக்களத்தால் இந்த மாதம் 2ம் திகதியிலிருந்து அனுப்பி வைக்கப்படுகின்றது. இதற்கான படிவத்தை எழுத்து மூலம் பதிவுசெய்து அனுப்பலாம். அல்லது கணினி வழியாக ஒன்லைனிலும் நிரப்பலாம்.

கனடாவில் வாழுகின்ற ஒவ்வொருவரும் - அவர்கள் கனடியப் பிரஜைகள், வேறு நாடுகளிலிருந்து வந்து குடியேறி நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்கள், அகதிக் கோரிக்கையாளர்கள், அகதிகள், வேலை செய்ய அல்லது கல்வி பயில அனுமதி பெற்றவர்கள் ஒவ்வொருவரும் இப்படிவத்தை நிரப்ப வேண்டிய கட்டாயம்.

இப்படிவத்தை நிரப்ப வேண்டியது கனடிய குடியியல் பொறுப்பு மட்டுமன்றி சட்ட ரீதியாகவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான இரண்டு பக்கத் தகவல் தொகுப்பு கனடிய அரச கரும மொழிகளான ஆங்கிலம் பிரெஞ்சு உட்ட வேறு பதினொரு மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மற்றும் பஞ்சாபி ஆகிய தெற்காசிய மொழிகளிலும் இந்த தகவல் தொகுப்பு உள்ளது.

இதன் பிரதியொன்றைப் பெற விரும்பின் 1-855-700-2016 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ஒவ்வொருவரும் வழங்கும் விபரங்கள் புள்ளிவிபரவியல் சட்டத்துக்கு இணங்க இரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சேகரிக்கப்படும் தகவல்கள் கனடாவில் பகலில் பிள்ளைகள் பராமரிக்கும் நிலையங்கள், பாடசாலைகள், சுகாதாரப் பராமரிப்பு சேவை, பன்மொழி வகுப்புகள், பொலிஸ் மற்றும் தீயணைப்புச் சேவைகள், மூத்த பிரஜைகளுக்கான இல்லங்கள் போன்றவற்றைத் திட்டமிடப் பயன்பெறும்.

ஒவ்வொரு இனம் சார்ந்ததாக நேரடியாகக் கணக்கெடுப்பு நடத்தப்படுவதில்லையாயினும், ஒவ்வொருவரதும் வீட்டுமொழி என்னவென்பதை அறிவதன் ஊடாக இந்தத் தரவினைப் பெறமுடிகின்றது.

குடிசன மதிப்பீடு தொடர்பான பதில்களில் உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் பற்றிய விபரங்களை குடிசன மதிப்பீட்டுப் பிரிவின் இணையத்தளத்திலும், கட்டம் 'பி'யில் உள்ளடக்கப்படுவதற்கான நபர் பற்றிய பிரிவிலுள்ள வினாக்கள் அடங்கிய ஆவணத்திலும் பார்க்கலாம்.

எஸ்தி





றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

சிறார்களைப் பாதிக்கும் ஆரோக்கியமற்ற உணவு வகைகளுக்கான விளம்பரங்களை நிறுத்த றொறன்ரோ நகரசபை ஆலோசித்து வருகிறது. முக்கியமாக 16 வயதுக்குட்டவர்களைக் கருத்தில்கொண்டு இந்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. றொறன்ரோவில் 7ம் வகுப்புக்கும் 12 வகுப்புக்குமிடையில் கல்வி கற்கும் மாணவர்கள் எடை அதிகரித்தவர்களாகவும், அளவுக்கு மீறிய பருமனுள்ளவர்களாகவும் இருப்பதற்கு ஆரோக்கியமற்ற உணவுகளே முக்கிய காரணமாம்.

ஒன்ராறியோ மாகாண அரசு கொண்டுவரவுள்ள புதிய வாடகைக் குடியிருப்பாளர் சட்டம் கூடுதலாக குடியிருப்புகள் மற்றும் மாடிமனைகளின் சொந்தக்காரர்களுக்கே சாதகமாக உள்ளதாகவும், குடியிருப்பாளர்களை இலகுவாக வெளியேற்ற வாய்ப்பளிப்பதாக அமைந்துள்ளதாகவும் குடியிருப்பாளர் அமைப்புகள் தெரிவித்து உள்ளன. புகைப்பவர்கயையும், வளர்ப்புப் பிராணிகளை வைத்திருப்பவர்களையும் தாமதமின்றி வெளியேற்ற புதிய சட்டத் திருத்தம் அனுமதி வழங்குகின்றது.

கனடிய நாடாளுமன்றத்துக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் தெரிவான புதியவர்களில் சிறப்பாகப் பணியாற்றியவர்கள் என்று மூன்று கட்சிகளையும் சேர்ந்த எட்டு உறுப்பினர்களை 'ஒட்டாவா சிற்றிசன்' பத்திரிகை அடையாளம் காட்டியுள்ளது. அவர்களின் பெயர்கள் வருமாறு: Liberals - Pamela Goldsmith - Jones, David lametti, Francois-Philippe Champagne. Conservative - Gerard Deltell, Katen Vecchio, Michael Cooper. NDP - Karine Trudel, Damiel Blaikie.

கடந்த மாதம் 21ம் திகதி தமது 90 வயதைத் தாண்டிய பிரித்தானிய முடிக்குரிய மகராணி பதவி விலக வேண்டுமென்று பெரும்பாலான கனடியர்கள் விரும்புகின்றனர். 68 வயதை எட்டியுள்ள அவரது மூத்த மகன் சார்ள்ஸிடம் பதவியை ஒப்படைக்க வசதியாக மகாராணி இனி ஓய்வுபெற வேண்டுமென்று கருத்துக் கணிப்பொன்றில் 54 வீதமான கனடியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆனால் சர்ள்ஸின் மூத்த மகன் வில்லியம் வசம் பதவியைக் கையளிக்கவே மகாராணியார் நாட்டம் காட்டுகின்றாராம்.

ஒன்ராறியோ மாகாணத்தில் இந்த மாதத்திலிருந்து மின்சாரக் கட்டணம் மேலும் அதிகரித்துள்ளது. இதனால் மாதமொன்றுக்கு 750 கிலோவாற் மின்சாரம் பாவிக்கும் ஒருவரின் மாதக் கட்டணம் ஒரு கிலோவட்டுக்கு அரை டாலரினால் அதிகரிக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. காலை 7 மணிக்கும் 11 மணிக்கும் இடையிலும், பிற்பகல் 5 மணிக்கும் 7 மணிக்குமிடையிலும் கட்டண அதிகரிப்பு சிறிது குறைவாகவிருக்கும். பகல் 11-5 மணிக்கிடையிலான பாவனைக்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டும்.

கனடிய மத்திய கொன்சர்வேடிவ் கட்சியின் தலைவராகத் தகுதியானவர் யாரென்று நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பொன்றில் கட்சியின் தற்போதைய இடைக்காலத் தலைவர் றொனா அம்புறோஸ் 26 வீத ஆதரவுடன் முன்னணியில் நிற்கிறார். இவருக்கு அடுத்தடுத்த இடங்கிளில் கெவின் ஓ லெரியும் (20 வீதம்), பீட்டர் மக்கேயும் (16 வீதம்) உள்ளனர். முன்னாள் குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி 6 வீத வாக்குகளுடன் ஆறாவது இடத்தில் நிற்பது குறிப்பிடத்தக்கது.

குடியிருப்புகளைச் சுற்றி வசிக்கும் 'ரக்கூன்' விலங்கு, குப்பைத் தொட்டிகளைப் புரட்டி எடுத்து குப்பைகளை வெளியே விசிறி குடியிருப்பாளர்களுக்கக் கொடுக்கும் தொல்லைக்கு றொறன்ரோ நகரசபை முடிவு கட்டியுள்ளது. 'ரக்கூன்' உட்புகமுடியாத புதுவகையான திடமான 'பச்சை நிற குப்பைத் தொட்டிகளை' றொறன்ரோவின் 50,000 குடியிருப்புகளுக்கு வழங்கும் வேலை கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது. பல வருட பரீட்சார்த்த முயற்சியின் பின்னர் புதிய தொட்டி தயாரிக்கப்பட்டது.

## றொப் ஃபோர்ட் இடத்துக்கு சகோதரர் றொப் அல்லது மருமகன் மைக்கல் ஃபோர்ட்

கடந்த மார்ச் மாதம் காலமான றொப் ஃபோர்ட் பிரதிநிதித்துவம் செய்த றொறன்ரோவின் இரண்டாம் வட்டாரத்துக்கு விரைவில் இடைத்தேர்தல் நடத்தப்படுமெனத் தெரிகின்றது. இடைத்தேர்தலின்றி ஒரு உறுப்பினரை நியமிக்கும் அதிகாரம் றொறன்ரோ நகரசபைக்கு இருப்பினும், அடுத்த தேர்தலுக்கு இரண்டு வருடங்களுக்கு மேலிருப்பதால் இடைத்தேர்தல் நடத்தவே தாம் விரும்புவதாக மேயர் ஜோன் ரோறி அறிவித்துள்ளார். இடைத்தேர்தல் நடைபெறுமானால், றொப் ஃபோர்ட்டின் சகோதரரான டக் ஃபோர்ட் அல்லது இவர்களது மருமகனான மைக்கல் ஃபோர்ட் போட்டியிடலாமென இவர்களின் குடும்பத்தினர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். வெற்றி வாய்ப்பும் இவர்கள் பக்கமே உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## றொறன்ரோவில் வாகன விபத்துகள் அதிகரிப்பு

றொறன்ரோவில் வாகன விபத்துகள் வேகம் கொண்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இந்த வருடத்தின் முதல் நூறு நாட்களில் இவ்விபத்துகளால் 27 பேர் மரணமாகியுள்ளனர். இவர்களில் ஆறு பேர் வாகன சாரதிகள். ஆறு பேர் வாகனப் பயணிகள். மிகுதிப் 15 பேரும் பாதசாரிகள். அனேகமான பாதசாரிகள் வீதிகளைக் கடக்கும்போது விபத்துகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர். இவ்வருட முதல் நூறு நாட்களின் எண்ணிக்கையைக் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 47 வீதம் அதிகமாகும்.

## மருத்துவர் ஒருவரின் ஒரு வருட வருமானம் 6.6 மில்லியன் டாலர்

ஒன்றாறியோவிலுள்ள மருத்துவர் ஒருவர் தமது கடந்த வருட வருமானமாக 6.6 மில் லியன் டாலரை மாகாண சுகாதர அமைச்சின் கீழுள்ள 'ஓஹிப்'பிடமிருந்து கோரியுள்ளார். இவர் ஒரு கண் மருத்துவர். இவரது வருமானக் கோரிக்கை பெரும் சலசலப்பபை ஏற்படுத்தியுள்ளது. இதுதவிர, சுமார் 500 மருத்துவர்கள் தங்களின் ஒரு வருட வருமானமாக ஒரு மில்லியனுக்கும் அதிகமான டாலர்களைத் தனித்தனியாகக் கோரியுள்ளனர்.



குயின்ரஸ் துரைசிங்கம்

# தமிழ்நாட்டில் வாக்கு வணிகம்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் இந்த மாதம் 16ம் திகதி நடைபெற இருக்கிறது. 234 தொகுதிகளைக் கொண்ட சட்டமன்றத்துக்கான இந்தத் தேர்தலின் முடிவுகள் 19ம் திகதி வெளிவர ஆரம்பிக்கும். இந்தியாவின் 29 மாநிலங்களில் தமிழகம் என்று பரவலாக தற்போது அழைக்கப்படும் தமிழ்நாடு, இந்திய துணைக்கண்டத்தின் தென்முனையில், கேரளா, கர்நாடகம், ஆந்திர மாநிலங்கள், புதுச்சேரி, காரைக்கால் போன்றவற்றை தன் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது. வடக்கிலும் மேற்கிலும் பல மலைத்தொடர்களாக நீலமலை-ஆனைமலை வீச்செல்லை, பாலக்காடு கணவாய் போன்றவற்றையும், கிழக்கே வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா, பாக்கு நீரிணை மற்றும் தெற்கே இந்தியப் பெருங்கடலுமென, 130 ஆயிரம் சதுரக் கிலோமீற்றர் பரப்பளவில், 72 கோடி மக்கள் சனத்தொகையுடன் அமைந்துள்ளது. 6000 ஆண்டுகளுக்கு மேல் தொன்மையான வரலாற்றைக் கொண்ட பாண்டிய, சேர, சோழ, பல்லவ, சாளுக்கிய, விஜய, நாயக்க அரச வம்சங்களின் ஆளுகையில், கல்வியிலும் வணிகத்திலும் சமய கலை கலாசார விழுமியங்களிலும் பலத்திலும் போர் வியூகத்திலும் விஞ்சி நின்றோராக, அக்காலப் பேரரசுகளான கிரேக்க ரோமப் பேரரசுகளுடன் வணிக வர்த்தகத் தொடர்புகளைக் கொண்ட ஆற்றல்மிக்க தமிழின வரலாற்றைக் கொண்டவர்கள் இங்கே வாழ்வாங்கு வாழ்ந்த, வாழுகின்ற பெருமக்கள்.

பல்வேறு படையெடுப்புக்களும், வெற்றிகளும் தோல்விகளும், தமிழ்நாட்டின் வளர்ச்சியில் கணிசமான பாதிப்பை உருவாக்கின. குறிப்பாக 9ம் நூற்றாண்டில் சோழர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, இராசராச சோழன் மற்றும் அவனது மகனான இராசேந்திர சோழன் ஆகியோரது ஆட்சியில் தென்னிந்தியா மிகப்பெரும் வளர்ச்சி காண ஆரம்பித்தது. ஆற்றல்மிக்க சோழப் பேரரசில் ஒரிசாவரை பரவிய இவர்களது ஆட்சி, சேர மன்னர்களைத் தோற்கடித்து, பாண்டிய அரசிடமிருந்து இலங்கையின் சில பகுதிகளையும் கைப்பற்றி, அந்தமான், நிக்கோபார் தீவுகள், இலச்சத்தீவுகள், சுமத்ரா, ஜாவா, மலேயா, பர்மா என்று முன்னேறிக் கோலோச்சிய காலம் அது. கங்கை கொண்ட சோழபுரம் எனும் தலைநகரை உருவாக்கிய வெற்றி வரலாறு, மறுபக்கத்தில், ஈழத்தில் வாழ்ந்த தமிழினத்துக்கு பின்னைய காலங்களில் சோதனை தரும் விடயமாக மாற்றம் பெற்றது. சோழ படையெடுப்பில் இலங்கையின் சில பகுதிகளும் கைப்பற்றப்பட்டதால் வெறிகொண்ட சிங்கள அடிப்படைவாதிகள், இலங்கையை விட்டு தமிழினத்தை ஒழித்துக் கட்டாவிட்டால், இலங்கையை இந்தியா மீளவும் கைப்பற்றி சிங்கள இனத்தை அழித்துவிடுமென்ற இனவெறிப் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டு, ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய ஆகக்குறைந்த உரிமைகளைக்கூட முளையிலேயே கிள்ளியெறிவதில் பௌத்த சிங்கள பேரினவாதிகளும், அநகாரிகதர்மபாலா போன்ற இனவாதிகளும் வெற்றிகண்டனர்.

## தமிழக அரசியல்

குமாரசுவாமிராஜா, இராஜகோபாலச்சாரி போன்றவர்களுக்குப் பின்னதாக, 1954ல் கே.காமராஜ் அவர்களுடன் ஆரம்பித்த தேர்தல்வழி ஆட்சித்தெரிவு நடைமுறை, எம்.பக்தவத்சலம், சி.என்.அண்ணாத்துரை ஆகியோரோடு சீராக நகர்ந்து, உறுதியான திராவிடக் கொள்கையுடன், 1967ல் மு.கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்திடம் கைமாறியது. 1977ல் முதலமைச்சராகப் பதவியேற்ற எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள், 1987 டிசம்பர் 24 வரை தொடர்ந்து முதலமைச்சராகப் பதவி வகித்தார்.

1967இலிருந்து இன்றுவரை, தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. (அஇஅதிமுக) ஆகிய இரண்டு கட்சிகளே மாறி மாறி பதவியிலிருந்து வருகின்றன. மு.கருணாநிதி அவர்களின் தி.மு.க. கட்சியையும், எம்.ஜி.ஆர். அவர்களின் அ.தி.மு.க. (அஇஅதிமுக) கட்சியையும், வேறு எந்தக் கட்சியும் பின்தள்ள முடியாமல் போனதை வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன.

## முத்துவேல் கருணாநிதி

நாகப்பட்டினத்தில், திருக்குவளை என்னும் கிராமத்தில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் முத்துவேல் கருணாநிதி. நீதிக்கட்சி உறுப்பினர்களின் பேச்சாற்றலால் கவரப்பட்டு அரசியலில் ஈடுபட ஆரம்பித்த கருணாநிதி, இளைஞர் அணியை ஒன்றுதிரட்டி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை வெற்றியுடன் நடத்தியதால், அரசியல் புகழ் வர ஆரம்பித்தது. எழுத்தாற்றலும் கைகொடுத்ததால், அரசியலில் மக்கள் அறிமுகம் இலகுவாகக் கிடைத்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் மூலம் அரசியலுக்கு வந்த ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்த கருணாநிதி, பிற்காலத்தில் தன் சந்ததியையே கோடீஸ்வரர்களாக்கி, ஏகப்பட்ட சொத்துக்கு அதிபதியானார். இந்தி எதிர்ப்பின் மூலம் நடுவண் அரசை வசைபாடி அரசியலில் மக்கள் செல்வாக்கைப்பெற்று உள் நுழைந்த கருணாநிதி, காங்கிரஸ் கட்சியையும் இந்திரா காந்தியையும் கடுமையாக தாக்கிப்பேசி, வன்முறையிலும் ஈடுபட்டு சிறை சென்றார். பின்னாளில் காங்கிரசுடன் கூட்டுச்சேர்ந்து, சோனியா காந்தியுடன் இணைப்பாட்சிக்கும் வழிவிட்டு, தன் ஆரம்பகால அரசியல் கொள்கைக்கும் தமிழ்மொழிப் போராட்டத்துக்கும் முழுக்குப் போட்டார்.

## எம். ஜி. இராமச்சந்திரன்

1935ல் வெளியான சதிலீலாவதியிலிருந்து, 47ல் கதாநாயகனாகப் பயணிக்க ஆரம்பித்த ராஜகுமாரி வழங்கிய புகழுடன், 1978ல் வெளிவந்த மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் வரை மொத்தம் 136 தமிழ் திரைப்படங்கள். சினிமாவி-ல் 'சூப்பர் ஸ்ரார்' மக்கள் திலகமாகவும், 1977ல் அரசியலில் வெற்றிபெற்று, இறக்கும்வரை முதலமைச்சராகப் பதவி வகித்து, மக்கள் நாயகனாகவும் வலம் வந்தார். மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் என்னும் தனது இயற்பெயரின் முதல் ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி, எம்.ஜி.இராமச்சந்திரன் என்று சினிமாவில் அறிமுகமாகி, அதுவே பின்னர் எம்.ஜி.ஆர். என்ற மக்கள் திலகமாக உருவெடுத்து, பாரத ரத்னா விருது வென்று வரலாறு படைத்தார். இலங்கையில் கண்டிக்கு அருகேயுள்ள நாவலப்பிட்டியில் பிறந்த இவர், பின்னாளில் தமிழ்நாட்டின் (32ம் பக்கம் வருக)



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# உங்களுக்கும் இப்படி ஆகலாம்

அவளது கழுத்தின் குரல்வளை மிதப்பின் சற்றுக் கீழே ஒரு அடையாளம். பிறப்பு மச்சம் அல்ல. நெற்றியில் பொட்டு இட்ட பெண்ணின் கழுத்திலும் மற்றொரு பொட்டா என மயங்காதீர். பல பெண்களின் வழக்கம்தானே இது என்கிறீர்களா?

இது பொட்டு இல்லை. ஆனால் பொட்டிட்ட கழுத்தில் அழிக்க முடியாத பொட்டு போலாகிவிட்டது. ஆம் தினமும் நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்த பின்னர். அதே கையால் அதே குங்குமத்தால் கழுத்திலும் ஒரு பொட்டு வைப்பது அவரது வழக்கமும் கூட. சில காலத்தின் பின்னர் அந்த இடம் சற்றுக் கறுத்துக் கொண்டு வந்தது. சற்று அரிப்பும் இருந்தது. ஆம் தோலில் அழற்சி ஏற்பட்டது. Contact Dermatiti என்பார்கள். ஊறு விளைவிக்கக் கூடிய எந்த பொருளுக்கும் எதிரான சருமத்தின் எதிர்வினையாக அழற்சி ஏற்படுகிறது. பெரும்பாலும் அப்பொருள் சருமத்துடன் தொடர்புறும் அந்த இடத்திலேயே ஏற்படும்.

அந்நியப் பொருள் சருமத்தில் படும்போது ஏற்படும் அழற்சியை அந்நியப் பொருற் தொடர்பு தோல் அழற்சி contact Dermatitis எனலாம். ஒட்டுக் கிரந்தி என்று பேச்சு வழக்கில் சொல்லலாம். சருமத்துக்கு ஒவ்வாத பொருளால், அதாவது அல்ர்ஜியை ஏற்படுவதாக இருந்தால் அதனை தொடர்பு ஒவ்வாமை தோலழற்சி Allergic contact Dermatitis என்பார்கள்.

Betamethazone போன்ற ஸ்டீரொயிட் கிறீம் மருந்துகளை அவ்விடத்தில் பூசி வர ஒவ்வாமை அழற்சி குணமாகும். ஒவ்வாமையை ஏற்படுத்தும் பொருள் மீண்டும் சருமத்தில் தொடர்புபடாது வைத்திருப்பதே முக்கியமானது.

•••

"போகுது வருகுது போகுது வருகுது போய்ப் போய் வருகிறது......"
"...எத்தனை மருந்துகளைப் பூசிவிட்டேன். மறைவது போல ஏய்ப்புக் காட்டி மீண்டும் மீண்டும் வருகிறது.."

நாற்பதை அண்டிய அவள் தனக்கு சீனி, கொலஸ்டரோல், பிரஸர் ஏதாவது வந்துவிட்டதா எனப் பார்க்க வந்திருந்தாள். ரிப்போட்டுகளைக் காட்டி முடிந்து எழுந்து போக முயன்றவள் மீண்டும் இருந்தாள். "இதையும் காட்ட வேணும் என்று நினைச்சனான் மறந்து போனன்" என்று மூக்கைக் காட்டினாள். கறுத்து சொரப்பாக மூக்கின் மேற்பாகம் அசிங்கமாகக் கிடந்தது.
"ஒரு வகை எக்ஸிமா ஒட்டுக் கிரந்தி" என்றேன்
"ஆனால் 'மருந்து பூசியும் மாறுதில்லையே" என்றாள்
"கண்ணாடி போடுறனீங்கள்தானே. இப்ப ஒருக்கா போடுங்க பார்ப்பம்" என்றேன்.

நான் நினைத்தது சரி. மூக்கில் அழுத்திக் கொண்டிருக்கும் நோஸ்பாட் (Nose pad) கண்ணாடியால் ஆனது எனவே அது அடையாளத்திற்குக் காரணமல்ல. கண்ணாடி பிரேமின் ரிம்தான் காரணம். அது மெட்டலால் (metal) ஆனது. அந்த மெட்டலுக்கான ஒவ்வாமையால்தான் அலர்ஜி ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் மீண்டும் மீண்டும் வருகிறது.
"கண்ணாடியை மாற்றுங்கள் ஆனால் அது பிளாஸ்டிக் பிரேம் உள்ளதாக இருக்க வேண்டும்" என்றேன். அடுத்த முறை அவரைக் கண்டபோது மூக்கு அழகாக இருந்தது

சருமத்துக்கு ஒவ்வாத பொருளால் ஒவ்வாமை ஏற்படுவதாக இருந்தால் அதனை தொடர்பு ஒவ்வாமை தோலழற்சி ஒட்டுக் கிரந்தி Allergic contact Dermatitis என்பார்கள்.

•••

பல்லி எச்சமிட்ட புண்களா?
"பல்லி எச்சம் இட்டுவிட்டது போலிருக்கிறது. வலிக்கிறது" என்றாள். தனது உதடுகளைச் சுட்டியபடி. அவளது உதட்டிலும் அதை அண்டிய முகத்தின் பகுதியிலும் சிறு சிறு கொப்பளங்கள் காணப்பட்டன
"பல்லி ஏன் உங்களது உதட்டைத் தேடி வந்து எச்சமிட்டது" என நான் கேட்கவில்லை. ஆனால் "ஏன் எல்லோரது உதட்டை மட்டும் தேடிப் போய் எச்சமிடுகிறது" என்ற சந்தேகம் மருத்துவம் படிக்கு முன்னர் என்னிடம் இருந்தது என்பதை மறுக்க முடியாது. உண்மையில் இதற்கும் பல்லி எச்சத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. இது ஒரு தொற்றுநோய். Herpes simplex virus (HSV) என்ற வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது.

•••

வாயைத் திறந்து நாக்கை நீட்டினார். நாக்கின் ஓரமாக இரு சிறு புண்கள் அவருக்கு இருந்தன. புண்களாக மட்டுமின்றி ஆடை படர்ந்த புள்ளிகள் அல்லது படைகள் போன்ற அடையாளங்களும் இருக்கலாம். சூட்டுப் புண்கள் என எண்ணிவிட்டார். மாறி மாறி பார்மசியில் கொடுத்த மருந்துகளைப் பூசிப் பார்த்தார். பயன் இல்லை. வலியும் இல்லை என்பதால் அக்கறை எடுக்கவில்லை. நாக்கில், வாயின் உட்புறங்களில் ஏற்படும் இத்தகைய புண்கள் அலட்சியப்படுத்தக் கூடியவை அல்ல. அப்பாவி போலக் கிடந்த அந்தப் புண் ஆய்வு கூடப் பரிசோதனையில் புற்று நோய் என்பது நிரூபணமாகி இருக்கிறது.

இது ஒரு மூதாட்டிக்கு நடந்தது. ஆனால் எவருக்கும் வரக் கூடிய ஆபத்தான நோய். புகைத்தல், வெற்றிலை சப்புதல், அதிகமாக மது அருந்துவது போன்றவற்றால் வருவதற்கான சாத்தியம் மிக மிக அதிகம். எனவே வாயில் மற்றும் நாக்கில் ஏற்படும் எத்தகைய புண்களையும் அலட்சியப்படுத்த வேண்டாம்.

•••

எதை எதற்குள் வைப்பது எனத் தெரியாது வைத்துத் திணறுபவர்கள் முதுவயதினர் மாத்திரமல்ல. இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை எந்தப் பருவத்திலும் தொடர்கிறது. இவற்றில் பல ஆபத்திலும் முடிவதுண்டு. இந்தச் சுட்டிப் பையனும் வைத்துவிட்டான். எடுத்துவிடுகிறேன் என்று முயன்ற தாயாரால் முடியவில்லை. இன்னும் உள்ளுக்குத் தள்ளியதுதான் மிச்சம். சும்மா பார்த்தால் தெரிகிறதா. இல்லவே இல்லை. நீண்ட சுரங்கப் பாதைபோல இருள் அப்பிக் கிடந்தது. ஒளியைப் பாய்ச்சியபோது ஏதோ வெண்மையாகத் தெரிந்து. காய்ந்த காதுக் குடுமியா, கல்லா, உருட்டிய பஞ்சா?

இதை எடுப்பதற்கு பல உபகரணங்கள் இருக்கின்றன. இதன் நுனியை அந்நியப் பொருளின் பிற்புறமாகக் கொண்டு சென்றபின் மறுபுறத்தில் உள்ள படியை அமுத்த நுனியில் உள்ள கொழுக்கி விரியும். மெதுவாக பிற்புறமாக நகர்த்த அந்நியப் பொருளை இழுத்துக் கொண்டு வந்துவிடும். காது மென்மையான பகுதி சிறு காயம் பட்டாலும் வலி ஏற்படும். கிருமி தொற்றலாம். தாயின் பொறுமையும் மருத்துவத் தாதிகளின் உதவியும் சேர வெளியே வந்துவிட்டது அந்த அந்நியப் பொருள். வேறொன்றுமில்லை மடித்துச் சுருட்டிய பேப்பர் துண்டு..

பெற்றோர்களே, குழந்தையின் காதுக்குள் அந்நியப் பொருள் போய்விட்டால் நீங்களாக எடுக்க முயல வேண்டாம். துரதிஸ்டவசமாக பிற்புறம் தள்ளுப்பாட்டால் செவிப்பறை காயமடையலாம். காது கேட்பதே பாதிப்புறலாம்.●



அ. முத்துலிங்கம்

# நாயும் தாயும்

'உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மறக்கமுடியாத சம்பவம் என்ன?'
'இது என்ன கேள்வி? தாயார் ஆனதுதான்.'

'அப்படியா, ஒருவருமே இதற்கு முன்னர் இப்படி பதிலளித்தது கிடையாதே.'

'ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மகத்தான சமயம் அல்லவா?

அன்றுதானே பெண் பூரணம் அடைகிறாள். பிறவிப் பயன் அதுதானே. என்னுள் இருந்து வந்த வழித்தோன்றல்கள் நால்வர். இரண்டு மகன்கள் இரண்டு மகள்கள். என் வாழ்க்கையை நான் போன பின்னர் இவர்கள்தான் தொடருவார்கள்.'

கேள்விகள் கேட்டது ஒரு மருத்துவர். பதில் சொன்னது 70 வயதுப் பெண். நியூயோர்க்கில் உள்ள மருத்துவ மனைக் கட்டில் ஒன்றில் படுத்திருந்தார். கடந்த இரண்டு மாதங்களாக அங்கே சிகிச்சை பெற்று வந்தார். நோயாளி கேட்டார், 'உங்களை எனக்கு முப்பது வருடங்களாகத் தெரியும்.

ஆரம்பத்திலிருந்து உங்களிடம்தான் சிகிச்சை பெற்று வருகிறேன். இரண்டு மாத காலமாக இங்கே படுத்துக் கிடக்கிறேன். என் வாழ்க்கையின் கடைசிக் காலம் வந்துவிட்டது எனக்குத் தெரிகிறது. இன்னும் எத்தனை வார காலம் அவகாசம் இருக்கிறது.'

மருத்துவர் யோசித்தார், பின்பு சொன்னார். 'அது கடவுளிடம் கேட்கவேண்டிய கேள்வி. என்னுடைய சிற்றறிவின் பிரகாரம் உங்களுக்கு இன்னும் மூன்றுமாத காலம் இருக்கிறது என்று எனக்குப் படுகிறது.'

'அப்படித்தான் நானும் நினைத்தேன். நான் எதற்காக இங்கே படுத்திருக்கிறேன். வீட்டுக்கு போகலாமே. என் பிள்ளைகளைப் பார்ப்பேன். பேரப்பிள்ளைகளை கொஞ்சுவேன். உற்றார், நண்பர்கள் வருவார்கள். என் செல்ல நாயுடன் விளையாடுவேன். முக்கியமானது,

இந்த மாதம் செர்ரி பழுக்கத் தொடங்கும். குருவிகள் சத்தமிட்டபடி முற்றுகையிடும். அந்தக் காட்சி எவ்வளவு அழகாக இருக்கும். அவைகளின் குதூகலத்தை பார்த்துக்கொண்டே இருக்கலாம். என்னை வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள்.'

'அதற்கென்ன, செய்துவிடலாம்.'

'ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள் என்னை வீட்டிலே வந்து பார்க்கவேண்டும்.'
'உங்களுக்கு தெரியும்தானே நியூயோர்க்கில் ஒரு மருத்துவரும் வீடுகளுக்கு போவதில்லை.'

'மருத்துவராக வரவேண்டாம். நண்பராக வாருங்கள். நான் இறக்க முன்னர்.'
'சரி, வருகிறேன்.'
'சத்தியம்.'
'சத்தியம்.'

மீதியை மருத்துவர் சொல்கிறார்.

'நான் வேலையில் மூழ்கியதால் அந்த அம்மையாரை மறந்துவிட்டேன். ஒருநாள் தொலைபேசி அழைப்பு அவருடைய மகனிடமிருந்து வந்தது. தன் தாயார் 'நான் தயாராயிருக்கிறேன்' 'நான் தயாராயிருக்கிறேன்' என்று அடிக்கடி புலம்புவதாகக் கூறினான். என்னுடைய சத்தியம் ஞாபகத்துக்கு வந்தது. அன்று பின்மதியமே அவருடைய வீட்டுக்கு புறப்பட்டேன்.

அழகாக பராமரிக்கப்பட்ட தோட்டம். பறவைகளின் ஒலி வாசலிலேயே கேட்டது. ஒரே கொண்டாட்டம். உள்ளே நுழைந்தேன். அறையிலே மகன்கள், மகள்கள், பேரப்பிள்ளைகள் என சூழ்ந்து நின்றனர். தயக்கமாயிருந்தது.

சோபாவில் ஒரு நாய் படுத்திருந்தது. அதுபோல ஒரு காட்சியை நான் என் வாழ்நாளில் கண்டது கிடையாது. அந்த நாயின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. நாய்களால் அழக்கூடும் என்பதுகூட எனக்குத் தெரியாது. என் மனதை ஏதோ செய்தது. சோபாவில் அமர்ந்தேன்.

நாய் தலையை மெள்ளத் தூக்கி என் மடியின்மீது வைத்தது. அதன் முதுகை மெதுவாகத் தடவிக் கொடுத்தேன். சற்று நேரத்தில் அமைதியானது. ஏதோ குறுஞ்செய்தி வந்ததுபோல திடீரென்று இறங்கி நடந்தது. நானும் பின்தொடர்ந்தேன்.

கட்டிலைச் சுற்றி நின்றவர்கள் வழி விட்டார்கள். நாய் நேராக அறைக்குள் சென்றது. யன்னல் வழியாக பறவைகள் ஒலியெழுப்பியபடி சர்க் சர்க் என்று பறப்பது தெரிந்தது. நாய் பாய்ந்து அம்மையாரின் பக்கத்தில் படுத்தது.

அவர் கண்களைத் திறந்து பார்த்து 'வந்துவிட்டீர்களா?' என்றார். அவ்வளவுதான். அதுவே கடைசி வார்த்தை.

சத்தியத்தை காப்பாற்றிவிட்டேன். நான் திரும்பினேன். பறவைகளின் கீச்சொலி இப்போது சோகமாக ஒலித்தது.●



‘சிந்தனைப் பூக்கள்’ எஸ். பத்மநாதன்

# உன்னதமான உறவுகள்

அறிவும் விவேகமும் ஒன்றென்றே பலரும் எண்ணுகிறார்கள். உண்மை அதுவல்ல. எல்லோருக்கும் பொதுவான அறிவு இருக்கும். வாழ்வதற்குத் தேவையான அடிப்படை அறிவு அநேகமாக எல்லோரிடமும் உண்டு. மிகவும் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் அறிவு வேறு, விவேகம் வேறு என்பது புரியும்.

மனநல வைத்திய முறையில் இவை இரண்டும் முக்கியமானவை. ஏனெனில் அறிவு உள்ளவர்களிடம் விவேகம் சிலவேளைகளில் இருப்பதில்லை. விவேகம் உள்ளவர்கள் சிலராகவே உள்ளனர். வில்லியம் கூப்பர் என்ற கவிஞரின் கூற்றுப்படி இதனைப் பார்க்கப் போனால் அறிவு வேறு விவேகம் வேறு.

அறிவு என்பது மூளையில் குடியிருப்பது. கற்றவை மற்றும் கேள்விப்பட்டவை மூலமாகவும், மற்றவர்களின் எண்ணங்களை ஏற்று மூளையை நிறைவு பெறச் செய்வதுதான் அறிவு. ஆனால் விவேகமோ மனம் சார்ந்தது. தனக்குள்ளேயே எழுகின்ற எண்ணங்களைக் கூர்ந்து கவனிப்பது.

அறிவு பூர்வமாகப் புரிந்து கொண்டவை எல்லாம் காலவோட்டத்தில் மாறக்கூடியவை. ஆனால் விவேகம் என்பது கூடிக் கொண்டு செல்லும். மிகவும் தெளிந்த ஞானிகளே தொலைநோக்குள்ளவர்களாகப் பிறக்கின்றனர். இமயமலைக்குச் செல்பவர்கள் மட்டுமே ஞானிகள் அல்லர். நமக்குள்ளே எத்தனையோ ஞானிகள் உளர். அவர்கள் மிகவும் கூர்ந்த நோக்குள்ளவர்கள்.

இசைஞானி இளையராஜா பள்ளியில் அதிகம் படித்தவர் அல்ல. ஆனால் அவருக்குள் இருந்த இசைஞானமும் பக்தியுமே அவரை உலகம் போற்ற வைத்துள்ளது.

இதுவரை வெளியான சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமான இவரது திரை இசைப் பாடல்கள் இவரின் இசைஞானத்துக்குச் சான்று பகரும்.

ஆயிரம் படங்களுக்குமேல் பின்னணி இசை வழங்கிய பெருமையாளர். நோர்வே, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றவர். இசைக் குறிப்புகள் எழுதுவதில் மிக வல்லவர். நானூற்றியம்பது பாடல்களுக்குமேல் தானே பாடியுள்ளார். சில படங்களில் நடித்துமுள்ளார்.

மேலைத்தேய இசையையும் கீழைத்தேய இசையையும் வைத்து திருவாசகம் அல்பத்தை வெளியிட்டவர். இவர் ஓர் இசை இயற்றுனர். கருவிகளின் ஒத்திசைவாளர். பாடலாசிரியர். சிறந்த இசை ஆய்வாளர்.

1988 முதல் இவர் இசைஞானி எனவே அழைக்கப்படுகின்றார். மூன்று பல்கலைக்கழகங்கள் கௌரவ கலாநிதி பட்டங்களை வழங்கியுள்ளன. இந்திய அரசு பத்மவிபூ'ண் (2010) விருதினை வழங்கி இவரைப் பெருமைப்படுத்தியுள்ளது.

பதினான்கு வயதில் தொடங்கிய இவரது இசைஞானம் 72 வயது வரையில் ஒளி வீசி இசைஞானியாக்கியதற்கு இவரிடமிருந்த விவேகமே காரணம்.●

# இங்கிலாந்தின் புதினம் பத்திரிகையின் 20வது ஆண்டிற்கான உலகளாவிய சிறுகதை கட்டுரைப் போட்டிகள்

இருபதாவது ஆண்டில் நடைபோடும் இங்கிலாந்தின் ‘புதினம்’ பத்திரிகை, உலகளாவிய ரீதியிலான சிறுகதை, கட்டுரைப் போட்டிகளுக்கான விபரங்களை அறிவித்துள்ளது. 1960களில் இலங்கையில் பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்த ஈ. கே. ராஜபோபால் புதினம் பத்திரியின் ஆசிரியரும் வெளியீட்டாளருமாவார். இவர் வாழும்கால மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவர்.

ஒவ்வொரு போட்டிக்கும் முதற் பரிசாக 200 ஸ்டேர்லிங் பவுணும், இரண்டாம் பரிசாக 100 ஸ்டேர்லிங் பவுணும், மூன்றாம் பரிசாக ஐம்பது ஸ்டேர்லிங் பவுணும், ஆறுதல் பரிசாக பத்துப் படைப்புகளுக்கு தலா 15 ஸ்டேர்லிங் பவுணும் வழங்கப்படவுள்ளது.

முன்னர் எங்கும் பிரசுரமாகாத, இலங்கை மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டதாக சிறுகதைகள் இருக்க வேண்டும்.

கட்டுரைகள் ‘தாயெனும் கோயில்’ என்ற தலைப்பில், ஒரு தாயின் நெஞ்சைத் தொடும் நினைவு ஊற்றாக அமைந்திருக்க வேண்டும்

அடுத்த மாதம் (ஜுன்) முதலாம் திகதி வரை போட்டிப் படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படும். உலகின் எந்த நாட்டிலிருந்தும் படைப்புகளை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய தபால் முகவரி:
Editor, Puthinam,
38 Moffat Road, London, SW 17 7EZ, UK.
மேலதிக விபரங்களை 011 44 208 767 8004 என்ற இலக்கத்தில் ஆசிரியருடன் தொடர்புகொண்டு பெறலாம்.

# வருமானவரி ஏய்ப்பு ஒரு மில்லியன் டாலர்

கனடாவில் சுமார் ஒரு மில்லியன் டாலர்களுக்கு மேற்பட்ட பணம் வரி ஏய்ப்புச் செய்யப்பட்டுள்ள-தாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. வரவு செலவு விபரங்களை தவறாகவும் மறைத்தும் தெரிவித்தே இந்த மோசடி இடம்பெற்றுள்ளதென வருமானவரித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கனகேஸ்வரி நடராஜா



# இரவுத் தங்கல் Sleepover

இன்று எமது குழந்தைகள் மத்தியில் பிரபல்யம் அடைந்துவரும் ஒரு சொல் Sleepover என்பதாகும். இதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லை அகராதியில் காண முடியவில்லை. அதனால் நானாகவே 'இரவுத் தங்கல்' என்ற சொல்லை உபயோகிக்கலாமென முடிவு செய்துள்ளேன்.

இந்த இரவுத் தங்கல் என்பது நாம் சிறுவர்களாக இருந்தபோது மிகவும் பரிச்சயமான ஒரு விடயமாக இருந்தது. அது ஒரு இரவாக இருப்பதில்லை. பல நாட்களாகவும் இரவுகளாகவும் இருக்கும். எப்போது பாடசாலை விடுமுறை வருமெனக் காத்திருந்து விடுமுறையைக் கழிப்பதற்கு உறவினர் வீடுகளுக்குச் செல்வோம். இங்கெல்லாம் உறவினர்களைத் தேடிப்பிடிப்பது அவ்வளவு சுலபமல்ல.

ஆதலால் அதிகமான குழந்தைகள் தமது பெற்றோரின் நெருங்கிய நண்பர்களின் வீடுகளில் தமது வயதொத்த குழந்தைகள் இருந்தால் அங்கு ஓர் இரவோ அல்லது சில இரவுகளோ தங்குகிறார்கள்.

எங்கள் வீடு யாழ்ப்பாணப் பட்டணத்தில் இருந்தது. மாட்டுக் கொட்டில், கோழிக் கூடுகள் என எல்லாமே அங்கிருந்தன. வளவுக்குள் விளையாட பெரிதாக இடமிருக்கவில்லை. அதனால் எப்போது விடுதலை வருமெனக் காத்திருந்து எனது தந்தையின் சகோதரி - மாமியின் வீட்டுக்குச் செல்வோம்.

இரண்டு மூன்று கிழமைகள் அங்கேயே நிற்போம். அது முற்றிலும் வேறுவிதமான ஓர் உலகம். எங்களின் ஒன்றுவிட்ட சகோதரங்களும் வருவார்கள். எங்களிலும் பார்க்க ஒரு சில வயதே கூடிய மார்க்கண்டு மாமா என்பவரும் மாமி வீட்டில் இருந்தார். அவர்தான் இந்தக் குழந்தைப் பட்டாளத்துக்குத் தலைவர்.

முதல் வேலையாக மாமரத்தில் பெரிய ஊஞ்சல் கட்டுவார். மாறி மாறி ஏறி ஆடுவோம். எங்களோடு அங்குள்ள அயல் பிள்ளைகளும் சேர்ந்து விடுவார்கள். "எங்கட ராசன்ரை பிள்ளைகள் வந்து நிற்கிறார்களாம்" என்று கூறிக் கொண்டு அயலவர்கள் பார்க்க வருவார்கள். பலகாரமோ மாம்பழமோ கொண்டு வருவார்கள். அதனை எல்லோரும் பங்கு போட்டுச் சாப்பிடும்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்.

மாமியின் வளவில் பழமரங்களுக்குக் குறைவில்லை. மாமரம், அன்னமுன்னா, விளாத்தி, கொய்யா, இலந்தை என்று அடுக்கிக் கொண்டே போகலாம். காயும் பிஞ்சுமாக அவற்றைப் பிடுங்கி உண்பதில் தனி இன்பம். பனங்கிழங்குப் பாத்திகளில் பனங்கிழங்கு தாராளமாகக் கிடைக்கும். சிலவேளைகளில் மார்க்கண்டு மாமா கோயில் கட்டித் தருவார். ஊருக்குள் தண்டிய பொருட்களைக் கொண்டு பொங்கல் செய்வோம். பெரியவர்களும் பங்குபற்றுவார்கள். மொத்தத்தில், எங்களுடைய அன்றைய இரவுத் தங்கல்கள் முற்றிலும் எமது நாளாந்த வாழ்க்கையிலிருந்து வேறுபட்டிருந்தது.

கனடாவில் எனது பேரக் குழந்தைகள் இரவுத் தங்கலுக்குச் செல்வதுண்டு. அவர்களின் சிநேகிதிகளும் வந்து தங்குவதுண்டு. ஆகக்கூடியது இரண்டு மூன்று நாட்கள் நிற்பார்கள். பெற்றோரை நன்றாகத் தெரிந்திருந்தால் தவிர எங்கள் குழந்தைகளை எங்கும் அனுப்ப மாட்டோம்.

ஒரு பெற்றார் மேற்பார்வை பார்ப்பதற்கு இருபத்திநான்கு மணித்தியாலங்களும் இவர்களோடு இருக்க வேண்டும். பலவிதமான பொழுதுபோக்கு ஆயத்தங்களை முற்கூட்டியே திட்டமிட வேண்டும். உணவு ஒவ்வாமை, ஓஹிப் அட்டை இலக்கம் முதலியவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இவர்கள் நாளாந்தம் தங்கள் வீடுகளில் செய்வதையே சிநேகிதர் வீடுகளிலும் செய்கிறார்கள்.

சிறுபிள்ளைகளை இரவுத் தங்கலுக்கு அனுப்பும் பொழுது பெற்றோர் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. பெற்றோரின் கட்டுப்பாட்டிலேயே அவர்கள் எங்கே போவது, என்ன செய்வது என்பன அடங்குகின்றன. யார் வீட்டுக்குப் போவது என்பதைக்கூட பெற்றோரே முடிவு செய்கின்றனர். பிள்ளைகள் பதின்ம வயதை அடைந்துவிட்டால் பிரச்சனை ஆரம்பித்து விடுகிறது.

பாடசாலைகளில் பலவிதமான கலாசாரத்தைச் சார்ந்த பிள்ளைகளோடு இரண்டாம் நிலைப்பாடசாலைகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் எங்கள் பிள்ளைகள் மிக நெருக்கமாகவும் நட்புடனும் பழகுகிறார்கள். ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகள் எல்லோருமே இரவுகளில் நண்பர்களின் வீடுகளில் தங்குகிறார்கள். சுற்றுலா செல்கிறார்கள். தாங்கள் எங்கே போகிறார்கள் என்ற விபரத்தைக்கூட சில பிள்ளைகள் வீட்டில் சொல்வதில்லை.

ஒரு நண்பரின் வீட்டுக்குச் செல்வதாகக் கூறி செல்வார்கள். பின்னர் அவர்களின் திட்டம் மாறிவிடும். அந்த நண்பரையும் கூட்டிக் கொண்டு வேறு வீட்டுக்குச் செல்வார்கள். சிலசமயங்களில் வீட்டுக்கு வரமாட்டோம் என்பதைக்கூட பெற்றோருக்குத் தெரியப்படுத்துவதில்லை.

இவர்கள் எங்கு போனாலும் செல்லிடத் தொலைபேசியூடாக அவர்களோடு தொடர்பு கொள்ளலாமென ஆறுதல் அடையும் பெற்றோர் ஏமாற்றமே அடைகிறார்கள். எத்தனை முறை பெற்றோர் அழைத்தாலும் தொலைபேசியைத் துண்டித்தே வைத்திருப்பார்கள். இதிலுள்ள பரிதாபம் என்னவெனில் பிள்ளைகளின் செல்லிடத் தொலைபேசியின் மாதாந்தக் கட்டணத்தைக்கூட பெற்றோரே செலுத்துகிறார்கள்.

சிறுபிள்ளைகளின் இரவுத் தங்கல் பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குள் அமைகிறது. வளர்ந்த பிள்ளைகளின் இரவுத் தங்கல் பெற்றோருக்குப் பெரும் தலையிடியாகவே உள்ளது. பதின்ம வயதுக்குப் பின்னர் பிள்ளைகளின் நடமாட்டம் பற்றி அறிவது இயலாத காரியமாகியுள்ளது. எவரது மேற்பார்வையுமின்றி நடைபெறும் இவர்களது ஒன்றுகூடல்களில் மதுபாவனை தாராளமாக இடம்பெறுகிறது. பாலியல் அசம்பாவிதங்களும் ஏற்பட இடமுண்டு.

சாரதி அனுமதியுள்ள பிள்ளைகள் வாகனங்களை வாடகைக்கு எடுத்து தூர இடங்களுக்குச் செல்கிறார்கள். விபத்துகளிலும் சிக்கி விடுவதுண்டு. வளர்ந்த பிள்ளைகள் பெற்றோரின் அறிவுரைகளைக் கேட்பதில்லை. இவ்விதமான செயற்பாடுகளால் இரவுத் தங்கல்கள் பெற்றோருக்குப் பெரும் சவாலாகவே அமைந்துள்ளது.●


ப. ஸ்ரீஸ்கந்தன்



# பார்வைப் பகிர்வுகள்

## யாழ்ப்பாண நூல் வெளியீடு

வேலைகள் நடந்து கொண்டிருக்கும் உயர்ந்த கட்டிடம் ஒன்றின் மொட்டைமாடியில் புத்தக வெளியீடு ஒன்றை நிகழ்த்துகின்ற யோசனை யாருக்கு வரும்? யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'புதிய சொல்' என்ற சஞ்சிகையை நடத்தும் 'விதை' குழுமத்தினரே இந்த வெளியீட்டு நிகழ்வை வெற்றிகரமாக நடத்தியவர்கள்.




யாழ்ப்பாண நகரிலுள்ள ஆஸ்பத்திரி வீதியில், புகையிரத நிலைய வீதிக்கு அண்மித்த கட்டிடமொன்றில் இந்நிகழ்வு இடம்பெற்றது. ஈழத்திலிருந்து பலத்த கவனயீர்ப்புடன் எழுதிக் கொண்டிருக்கும் புதிய தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவரான அனோஜன் பாலகிருஷ்ணன் எழுதிய 'சதைகள்' என்ற சிறுகதைத் தொகுதி இங்கு வெளியிடப்பட்டது.

வீதியில் நின்றவாறே அனோஜனும், வெளியீட்டு நிகழ்வுக்கு தலைமை வகித்த சதீஸ் என்பவரும் வந்தவர்களை வரவேற்றார்கள். நூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இந்த விழா மிகவும் ஒழுங்காகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது.

செல்வமனோகரன், பிருந்தா ஆகியோர் நூலை மிகவும் ஆழமாக விமர்சனம் செய்தனர். சமூகசேவையாளரும் தீவிர வாசகருமாகிய குமாரதேவன் பிரதிகளை வழங்க முதலிரு பிரதிகளையும் ப. ஸ்ரீஸ்கந்தன், 'அலை' ஆசிரியர் அ.யேசுராசா ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இறுதியில் நூலாசிரியர் அனோஜன் ஏற்புரை வழங்கினார்.


ஆண்மையவாதச் சிந்தனை கொண்ட தமிழ் சமூகத்தின் இன்றைய மனநிலையை, அதன் அகம் சார்ந்த பக்கங்களின் தொடர் மாற்றங்களை, மற்றும் வாழ்வியலை கதைப் பிரதிகளினூடாக வெளிப்படுத்தி வருபவர் அனோஜன் பாலகிருஷ்ணன்.

நுகர்வுக் கலாசார இலங்கைச் சூழலின் மாறுபட்ட தளங்களினூடாக ஆண் பெண் உறவு நிலையில் ஏற்படும் வடிவ மாற்றங்களை இந்தக் கதைகளில் காண முடிகிறது.

மாதம் ஒரு புத்தகம் பற்றிய உரையாடலை நிகழ்த்துவது, தண்ணீர் மாசடைதல், சமூகச் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவது, மற்றும் எமது புராதன இடங்களுக்குச் சென்று அங்குள்ள மூத்தோர்களுடன் உரையாடிப் பதிவுகள் மேற்கொள்ளுதல் போன்ற பல விடயங்களை இந்த 'விதை' குழுமம் செய்து வருகிறது. இது முற்றிலும் இளைஞர்களைக் கொண்ட அமைப்பு என்பதுதான் சிறப்பு.

## அரசையா – முப்பத்தோராம் நாள் நிகழ்வு

அரசு என்றும் அரசர் என்றும் அரசையா என்றும் அன்பாக அழைக்கப்பட்ட சிவக்கொழுந்து திருநாவுக்கரசு (எஸ். ரி. அரசு) அவர்களின் முப்பத்தோராம் நாள் நிகழ்வு கடந்த மார்ச் மாதம் 20ம் திகதி நல்லூர் ஆலய பின்வளவிலுள்ள துர்க்கா மண்டபத்தில் இடம்பெற்றது.




ஒரு சமூகப் போராளியாகவும், சிறந்த நாடகக் கலைஞராகவும் மற்றும் திரைப்பட - புகைப்படத் துறைகளில் விற்பன்னராகவும் விளங்கியவர் அரசையா அவர்கள்.

உயர்ந்த தோற்றம், சீராக வாரப்பட்ட தலைமுடி, வீரத்தின் விளைநிலமாக வளர்ந்து நிற்கும் காதின் உரோமங்கள், வெள்ளை நிறத் தூய ஆடையுடன் ஈருருளியில் (சைக்கிள்) அவர் வீதிகளில் வலம்வரும் காட்சி அலாதியானது. தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டங்களிலும் சமூக நீதிக்கான செயற்பாடுகளிலும் அவர் தொடர்ச்சியாக தம்மை இணைத்துக் கொண்டவர்.

1961ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அஞ்சா நெஞ்சனாக அவர் பங்குகொண்டமை புகைப்பட ஆவணமாக தமிழர் வரலாற்றில் பதிவாகியுள்ளது. வாழும்போதே தமது ஆற்றலாலும் ஆளுமையாலும் மாமனிதர் மற்றும் கலாபூஷணம் போன்ற உயர் மதிப்புகளை தமதாக்கிக் கொண்டவர்.

யாழ்ப்பாணம் செல்லம்ஸ் ஸ்ரூடியோ என்றதும் அதன் உரிமையா-ளர் நிக்கலஸ் அவர்களுக்கு அடுத்ததாக நினைவுக்கு வருபவர் அங்கு பிரதான படக்கலைஞராகவிருந்த அரசு அவர்களே.

கலைவாணர் நாடக மன்றம், நுண்கலைச் சங்கம், மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம், நாடக அரங்கக் கல்லூரி போன்ற பல்வேறு கலைத்துறை அமைப்புகளோடு இணைந்து நின்று இலங்கையில் தமிழ் நாடக வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவர் இவர். யாழ். நாடக அரங்கக் கல்லூரியின் நிறுவனர்களில் இவர் ஒருவர்.

அரியாலையில் நடைபெற்ற எனது நூல் வெளியீட்டுக்கு வந்து என்னைப் பெருமைப்படுத்தினார். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அரியாலையில் நிறைய நாடகங்களில் நான் நடித்தது எனது நூலில் பதியப்படவில்லை என்ற தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியதை இங்கு நினைவு கூறுகிறேன்.

அரசையா அவர்களின் மறைவின் முப்பத்தோராம் நாள் நிகழ்வில் மூத்த நாடகக் கலைஞர்கள் பலர் உரை நிகழ்த்தினர்.●

பொன்னையா விவேகானந்தன்



# ஆசிரியர் - ஒரு மதிப்பீட்டாளர் Teacher as an Assessor

14

கற்பித்தலில் மதிப்பிடுதல் முதன்மையானதொரு நடவடிக்கையாகும். கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர் மேற்கொள்ளும் ஒவ்வொரு நகர்வும் மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே நிகழ்கின்றது. மதிப்பிடுதல் பற்றி முழுமையாக அறிந்திருப்பதுடன், பரிந்துரைக்கப்படும் மாற்றங்களையும் ஏற்றுக் கொண்டு, தன்னையும் மாணவரையும் கற்பித்தலையும் அவ்வப்போது தெளிவாகவும் நிறைவாகவும் மதிப்பிடுதல் ஆசிரியருடைய அடிப்படைத் தகுதியாகவே நோக்கப்படுகின்றது.

மதிப்பிடுதலைக் குறிக்க ஆங்கிலத்தில் Assessment என்றும் Evaluation என்றும் இரு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு சொற்களும் வெவ்வேறான பொருளைக் கொண்டவை என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் அறிந்திருக்க வேண்டும்.

மதிப்பிடுவதற்காகத் திட்டமிடுதலையும் தரவுகள், கருவிகளையும் முடிவுகளைத் தரவல்ல அளவீட்டு முறைகளையும் (tools and resulting measurements) 'Assessment' என்கின்றனர்.

குறிக்கப்பட்ட இலக்குகளை நோக்காகக் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட கருவிகள், அளவீட்டு முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற செயன்முறைகளுடாக முடிவுகளைக் கண்டறிதல் 'Evaluation' எனப்படுகின்றது.

'Assessment' என்பதை மதிப்பீடு என்றும் 'Evaluation' என்பதை மதிப்பிடுதல் என்றும் கருதலாம். இவ்விரண்டுக்குமான வேறுபாடுகளைச் சற்றே விரிவாக நோக்குவோம்.

மதிப்பீடு (Assessment):
கற்றல் செயல்முறைகளையும் அவற்றினூடாக மாணவர் பெறுகின்ற வளர்ச்சிப்படிகளையும் 'மதிப்பீடு' (Assessment) கருத்திற் கொள்ளும். குறிக்கப்பட்ட இலக்குகளை நோக்காகக் கொண்டு வகுப்பறையில் மேற்கொள்ளப்படுகின்ற கற்றல் செயல்முறையின் போக்குகளையும் அவை மாணவரிடத்தே ஏற்படுத்துகின்ற தொடர்ச்சியான மாற்றங்களையும் அவ்வப்போது அளவிட முன்னெடுக்கும் செயற்பாடே மதிப்பீடு (Assessment) ஆகும். இதில் ஆசிரியர் மாணவரது நடத்தைகள் (Activities) முன்னிலைப்படுத்தப்படும். மாணவருடைய கருத்தாய்வுகள், குழுச்செயற்பாடுகள், நடத்தைகளின் வெளிப்பாடுகள், கருத்துக் கணிப்புகள், ஆய்வுகள் என்பன மதிப்பீட்டு முறைகளாகவும் கருவிகளாகவும் (Assessment tools) கருதப்படுகின்றன. கற்றல், கற்பித்தல் செயல்முறைகளை மேம்படுத்துவதற்காக மதிப்பீடு (Assessment) மேற்கொள்ளப்படுகின்றது.

மதிப்பிடுதல் (evaluation):
கற்றலின் ஊடாக மாணவர் பெற்ற ஆற்றல்கள், திறமைகளின் தேர்ச்சியை 'மதிப்பிடுதல்' (evaluation) கருத்திற் கொள்ளும். குறிப்பிட்ட இலக்குகளை நோக்காகக் கொண்ட கற்றலின் போது, அவ்வப்போதும் இடையிலும் முடிவிலும் மாணவர் பெற்றுக் கொண்ட திறன்களை அளவிட்டு அறிந்து கொள்வது மதிப்பிடுதல் (Evaluation) எனப்படுகின்றது. மதிப்பிடுதலானது ஆசிரியர் மாணவரது நடத்தைகளின் விளைவுகளை முன்னிலைப்படுத்து-கின்றது. வினா விடைகள், வினாத்தாள்கள், திறனறி செயற்திட்டங்கள், குழுச் செயற்பாடுகள் போன்றன வாயிலாக மாணவரின் திறன்களின் தேர்ச்சியை அளவிடுவதை 'மதிப்பிடுதல்' என்றும் விளைவுகளை 'முடிவுகள்' (Result) என்றும் கூறுகின்றனர். இது மாணவரின் திறனை அளவிடவும் புள்ளியிடவும் பயன்படுத்தப்படுகின்றது.

Assessment
Evaluation

Emphasis on the teaching process and progress
Emphasis on the mastery of competencies

Focus on the Teacher Activity or Student Activity
Focus on Student Performance or Teacher Performance

Methods include: Student Critiques, Focus Groups,
Methods include: Test/Quizzes, Semester Projects,

Interviews, Reflective Practice, Surveys and Reviews
Demonstrations or Performances

Purpose is to improve the teaching and learning process
Purpose is to assign a grade or ranking

Generally Formative
Generally Summative

வரையறுக்கப்பட்ட இலக்குகளை நோக்கிய மாணவருடைய கற்கையானது, சீரான போக்கில் மேம்பட்டு, மாணவரது அறிவிலும் நடத்தைகளிலும் நிரந்தர மாற்றங்களை ஏற்படுத்தி இலக்குகளை நிறைவாகச் சென்றடைவதற்கு இந்த இரண்டு மதிப்பீட்டு முறைகளும் மிக அவசியமானவையாகும்.●



எஸ். ராஜ்மோகன்

# பனிலமாடம் 21

## விலங்கினம் காப்போம்

கடந்த வருடம் இடம்பெற்ற தமிழர் தகவலின் 24ஆவது ஆண்டு விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருதை ஏற்றுக் கொண்டு உரையாற்றிய மூத்த விஞ்ஞானி முனைவர் முத்துலிங்கம் சஞ்சயன் அவர்கள், தான் சிறுவயதில் தெகி-வளை மிருகக் காட்சிச்சாலைக்கு அருகில் பயணம் செய்யும்போது அங்கிருந்து வரும் ஒரு வகையான மணம் தனக்கு மிகவும் பிடிக்குமென்று குறிப்பிட்டிருந்தார். உண்மையில் அந்த மிருகக் காட்சிச்சாலையில் இருந்து கிளம்பிய மணத்தின் பிடிப்புத்தான் அவரை இன்று உலகம் புகழும் சூழலியல் நிபுணராகவும், அறிவுரைஞராகவும் அடையாளப்படுத்தி நிற்கின்றது எனலாம்.




அமெரிக்காவில் உயிரியல் துறையில் இளமாணிப் பட்டத்தையும், சூழலியல் துறையில் முதுமாணிப் பட்டத்தையும், உயிரியல் ஆய்வில் முனைவர் பட்டத்தையும் பெற்று, அமெரிக்காவின் மிகப் பெரிய சூழலியல் அமைப்பான The nature conservancy இல் முக்கிய நிபுணராக அறியப்பட்ட இவர், பல தொலைக்காட்சிகளில் சூழலியல் சம்பந்தப்பட்ட பல நிகழ்ச்சிகளையும், கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றார். இயற்கை பற்றிய பல ஆராய்ச்சிகள் செய்து பல விவரணப் படங்களையும் தயாரித்துள்ளார்.

'டேவிட் லேட்டர்மான்' நடத்திய நிகழ்ச்சியொன்றில் சூழலியல் சம்பந்தமாகக் கலந்து கொண்ட இவர், 'மனிதனும் இயற்கையும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டுள்ளதால் இயற்கை அழிந்தால் மனிதனும் அழிந்து விடுவான்' என்று கூறுகின்றார். இவர் உலக சூழல் பாதுகாப்புக்கு ஆற்றிவரும் அளப்பரிய பணி தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கின்றது. இதை ஏன் இங்கு கூறுகின்றேன் என்றால், ஆறாம் வகுப்பில் படிக்கும் எனது இரண்டாவது மகனுக்கு விலங்குகளைக் கண்டால் சுத்தமாக ஆகாது. நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்பது மாதிரி நாய், பூனைகளைக் கண்டால் இவனைக் காணமுடியாது. அவ்வளவு பயம்! அவனை நான்கு வருடத்துக்கு முன்னர் இலங்கைக்குக் கூட்டிச் சென்று பட்ட சிரமம் இன்றும் ஞாபகத்தில் உள்ளது.

வாகனத்தை விட்டு இறங்கும் முன்னர் நாய், பூனை, மாடு, ஆடு இருக்கின்றதா என்பதைக் கேட்டறிந்த பின்னரே அவனது கால் நிலத்தில் படும். இது ஒவ்வொரு வீட்டுக்குப் போகும் போதும் நடந்தது மட்டுமல்லாமல், இந்தப் பயப்பட்டியல் கோழி, கோழிக் குஞ்சு என்று நீண்டு கொண்டே சென்றது. இப்படிப்பட்ட அவனுக்கு தொட்டிகளில் வளர்க்கும் மீன்களை நன்றாகப் பிடிக்கும், பயமும் இல்லை. காரணம் அது தண்ணீரை விட்டு வெளியே வரமுடியாது என்பதாலேயே.

இந்தப் பயம் அப்படியிருக்க, அவனுக்கு எப்படித்தான் விலங்கினங்களை அழியவிடாமல் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் வந்ததென்று எனக்கு இன்றும் புரியவில்லை! சில வருடங்களுக்கு முன்னர் அவனது பாடசாலை ஊடாக 'Earth Rangers' என்ற அமைப்பில் அங்கத்துவமாகி, அழிந்து போகும் விலங்கினங்களைக் காப்பாற்றுவதற்காகவும், அவை இருப்பதற்கான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் தன்னாலான ஆதரவு வழங்குவதை அறிய முடிகின்றது. அத்துடன் Bring back the wild என்ற திட்டத்திற்கான நிதி சேகரிப்பிலும் அக்கறை கொண்டு பலருடன் தொடர்பு கொள்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

Earth Rangers எனப்படும் இந்த அமைப்பினரின் குறிக்கோள் To educate and empower children to bring back the wild ஆகும். இன்றைய எமது அன்றாட வாழ்க்கையின் முனைப்பான செயற்பாடுகளினால் எம்மைச் சுற்றியுள்ள சூழலை முற்றாக மறந்து விடுகின்றோம். இது ஒரு முக்கியமான விடயமாக இருக்கின்ற போதும், இந்த விடயத்தை நாங்கள் சிந்திப்பதும் இல்லை அல்லது அதன் முக்கியத்துவத்தை எமது பிள்ளை - களுக்கு எடுத்துச் சொல்வதும் இல்லை. ஆனால் Earth Rangers என்ற அமைப்பு பாடசாலை மூலமாகவும், தனிப்பட்ட முறையிலும் இளைய சமுதாயத்தினருக்கு விலங்கினங்களைப் பாதுகாக்கும் சந்தர்ப்பங்களை வழங்கி வருகின்றது. இதன் மூலம் பாடசாலை மட்டத்திலும், சமுதாயப் பரப்பிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டு வரமுடியும் என இந்த அமைப்பு உறுதியாக நம்புகின்றது.

இந்த அமைப்பினூடாக கனடாவில் 100,000 க்கும் மேற்பட்ட இளையவர்கள், அழிந்து போகும் விலங்கினங்களைப் பாதுகாப்பதிலும், அவை வாழும் இடங்கள் (habitats) அழிந்து போகாமல் காப்பதிலும் முன்னின்று உழைத்து வருகின்றமை ஆச்சரியத்தைத் தருகின்றது. இந்த Earth Rangers அமைப்பின் அங்கத்துவம் முற்றிலும் இலவசமாகும். பெற்றோர்களின் அனுமதியுடன் பிள்ளைகள் இதில் இலகுவாக சேர்ந்து விட முடியும். நிதி சேகரிப்பு இலக்குடன் நீங்கள் பதிவு செய்யும்போது உங்களுக்கான அங்கத்துவ அட்டை Earth Rangers அமைப்பினரால் அனுப்பி வைக்கப்படுகின்றது.

விலங்கினங்களையும், அதன் இருப்பிட-ங்களையும் பாதுகாப்பதற்கு நிதி சேகரிப்பு அவசியமானதாக உள்ள போதும் இது அங்கத்துவராகுவதற்கு கட்டாயமானது அல்ல. இவர்களது இணையத்தளத்தில் உள்ள அழிந்து போகும் விலங்கினங்களை நீங்களே தெரிவு செய்துகொண்டு அதை காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இது பற்றிய மேலதிக தகவல்களை www.earth-rangers.com என்ற இணையத் தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

அழிந்து போகும் விலங்கினங்களைப் பாதுகாப்பதற்கும், நமது சூழலை நன்றே பேணுவதற்கும் நாம் எடுக்கும் முயற்சிகள் எமது அடுத்த சமுதாயத்தை முன்னோக்-கிய நிலையில் அடியெடுத்துவைக்க உதவுகின்றது. இது சாத்தியப்படும்போது எமது எதிர்கால சந்ததியினருக்கு விதை-களைத் தூவ வேண்டிய அவசியம் இருக்காது. எமது முதாதையர்களையும், அவர்களின் ஆழமான வழிமுறைமைகளையும் பின்பற்ற வேண்டியது கடமையாக உள்ளது

இயற்கை நேசிக்கப்பட வேண்டும்!.●



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன்

ஏப்ரல் மாதம்... நம் தமிழ்ப் புத்தாண்டு பிறந்தது.. சிங்கள-தமிழ் வருடப்பிறப்பு என்று அதை பலரும் முகப்புத்தகத்தில் குறிப்பிட்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். இலங்கையின் சமகால நிலவரத்தைக் கணக்கில் எடுத்து அவர்களில் பலரதும் பதிவுகள் வந்துகொண்டிருந்தன. அவ்வாறு என்னை வாழ்த்திய ஒருவரது பதிவின்கீழ் நான் இட்ட பதிவை அவர் நீக்கிவிட்டார். உண்மையில் அது எனக்கு ஒரு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. நான் போட்ட பதிவைக் கீழே தருகிறேன்:

*'தமிழ்ப் புத்தாண்டை சிங்க–தமிழ்ப் புத்தாண்டு என்று அழைப்பதில் உள்ள நுண் அரசியலை நாம் புரிந்து கொள்ள வேண்டும். கரெகோரியன் கலண்டரை ஆங்கிலப் புத்தாண்டு என்று சொல்வதுபோல இந்துப் பாரம்பரியத்தில் வந்த இந்தப் புத்தாண்டை தமிழ்ப் புத்தாண்டு என்று இலங்கையில் அழைப்பதே முறையானதாகும். ஆனால் சிங்கள சமூகம் இந்த புத்தாண்டு முறைமையை தன்னுடைய புத்தாண்டாக வரித்துக் கொண்டுவிட்டது. ஆனால் தமிழ்ப்புத்தாண்டு என அதை அழைப்பதை மானசீகமாக ஏற்கவில்லை. மாறாக சிங்களப் புத்தாண்டாகத்தான் அதனைக் கொண்டாடு–கிறது. அதாவது சிங்கள–தமிழ்ப் புத்தாண்டு என்று ஒருமித்து அழைப்பதன் மூலம் தமிழ்ப் புத்தாண்டு சிங்கள மயமாக்கப்படுகிறது. இச் சொற்றொடரை நாம் ஏற்கத் தேவையில்லை.. இலங்கையைப் பொறுத்தவரை இது தமிழ்ப்புத்தாண்டே..'* என்று எழுதியிருந்தேன். (நான் எழுதிய கருத்து பிழையானதாக இருக்குமோ?) ஏனோ தெரியவில்லை - என் பதிவை நண்பர் நீக்கிவிட்டார். நுண் அரசியல்?

தமிழகத் தேர்தல் வந்தாலும் வந்தது. முகப்புத்தகத்தில் இந்த மாதம் கலகலப்புக்-குக் குறைவேயில்லை. திமுக, அதிமுக, தேமுதிக, மக்கள் நலக்கூட்டணி, நாம்தமிழர் கட்சி என தமிழகத்தின் பல அரசியல் தரப்புகளும் முகப்புத்தகத்தை பிரசாரங்களா-லும், சிரிப்பாலும் அதிரவைத்துக் கொண்டிருந்தன. கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள், அவர்களது பிரசார யுக்திகள், அவர்களது மேடைப் பேச்சுக்கள் என பற்பலவும் முகப்புத்தகத்தூடாக பெரும் கவனிப்புப் பெற்று வந்தன.

அவற்றுள் நான் ரசித்த ஒரு தேர்தல் கொமன்ட் ஒன்று இது... யாரோ ஒருவர் சாதாரணமான ஒரு சிறிய கொமன்டாகத்தான் இதைத் தன் முகப்புத்தகத்தில் எழுதியிருந்தார். ஆனால் இவ்வளவு சுருக்கமாக திமுக அதிமுக ஆட்சிகளை யாராவது சரியாக விமர்சனம் செய்திருக்கிறார்களா என்ற வியப்பு எனக்கு மேற்பட்டது. நீங்களும் அதைப் படித்துப்பாருங்கள்: *'கவனித்து பாருங்கள்.. இரு திராவிட கட்சியின் வாக்குறுதியுமே 50 ஆண்டுகால அரசியலில் அவர்கள் செய்த தவறை சரி செய்வதாக இருக்குமே தவிர புதிதாக எதுவும் இருக்காது.'* என்றிருந்தது அந்தப் பதிவு.

கருணாநிதி குறித்து பலதரப்பட்ட விமர்சனங்களை குறிப்பிட்ட சிலர் தொடர்ந்து வைத்துக் கொண்டே இருந்தனர். ஒருவரின் கிண்டல் கொமன்ட் இது: *வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவரிடம் "தமிழர்களாக நாம் எல்லாரும் கலைஞரின் முடிவுக்காகத்தான் காத்துக் கொண்டு இருக்கிறோம்.." என்று ஒரு கிராமத்தான் சொன்னாராம். அதற்கு அந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர் பிரமித்துப்போய், "என்ன... கலைஞர் என்ன அவ்வளவு பெரிய ஆளா?" என்று கேட்டாராம். அதற்கு "இல்லை.. கலைஞர் யாருக்கு போடவேண்டும் என்று சொல்கிறாரோ அவரை விட்டுவிட்டு வேற யாருக்காவது போட்டிடுவோம். எங்களுக்கு அரசியல் பற்றி அவ்வளவு தெரியாது. ஆனா கலைஞரைப்பற்றித் தெரியும்." என்றாராம் அந்தக் கிராமத்தான்.*

கடந்த மாத முற்பகுதியில் மக்கள் நலக்கூட்டணியில் தேமுக இணைந்தமை பரபரப்பாகிய-தால் பலரும் அதைப் பேசுபொருளாக்கிக் கொண்டிருந்தனர். அதனால் நானும் அதனுள் குதித்து என் கருத்தை எழுதிப் பார்த்தேன். *'விஜயகாந்த்–திமுக கூட்டணி அமைந்தால் திமுக வெல்லும் வாய்ப்பு ஓரளவுக்குப் பிரகாசமாக இருந்திருக்கும். இன்று தள்ளாடிக் கொண்டிருக்கும் திமுக இன்னும் பலமாகி, கருணாநிதி.. கருணாநிதிக்குப்பிறகு ஸ்டாலின் முதலமைச்சர்களாகவும் வருவார்கள். அதாவது விஜயகாந்த் தொடர்ந்தும் தள்ளியே வைக்கப்படுவார். பிறகு காணாமல் போய்விடுவார். இதைப்புரிந்துதான் திமுகவை பலப்படுத்துவதைத் தவிர்க்க – திமுகவுடன் கூட்டணிக்கு விஜயகாந்த் போகவில்லை. தான் சேராவிட்டால், திமுக தோற்று, கருணாநிதிக்குப் பின்னர் கட்சி பிரிந்து மறைந்து போய்விடும் தனக்கு லைன் கிளியர் என்பது மட்டுமே விஜயகாந்தின் ஆசை... எதிர்பார்ப்பு.'* என நான் எழுதியதை தமிழகத்தில் இருந்து பலரும் தம் பதிவுகளிலும் வெட்டி ஒட்டியிருந்தனர்.

முகப்புத்தகத்தில் விஜயகாந்த் குறித்த பல வீடியோக்கள் தொடர்ந்து சிரிக்க வைத்துக் கொண்டிருந்தன. விஜயகாந்தை ஒரு கொமடியன்போல உருவகித்த வீடியோக்கள் புற்றீசல்போலப் பகிரப்பட்டுக் கொண்டிருந்தன. குறிப்பாக விஜயகாந்த் நாக்குழறிப்பேசும் காட்சிகளும், சைகை காட்டும் காட்சிகளும், தொண்டர்களை அடிக்கும் காட்சிகளுமாகப் பற்பல! ஒருத்தர் அதை கிண்டலடித்தார்: *"கப்டன் விஜயகாந்த் ஒரு திருக்குறள்! திருக்குறளும் இரண்டு அடி தான், கேப்டன் பேசினாலும் இரண்டு அடி தான்"*

இதற்குள் சீமானின் ஆதரவு வீடியோக்கள் சுவாரஸ்யமாக இருந்தன. ஓரிடத்தில் சீமான் பேசியது இது: *"கருணாநிதி அவர்கள் கூறுகிறார், மதுக்கடைகளை மூட வேண்டும் என்று. ஆம் உண்மைதான் நீங்கதானே திறந்து வெச்சீங்க. உங்ககிட்டதான சாவி இருக்கும், நீங்கதான் மூடணும். தற்போதைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள், "தலை நிமிர்ந்த தமிழகமாக மாற்றுவேன்' என்கிறார். முதலில் உங்கள் மந்திரிகளை தலை நிமிர்ந்து நடக்க வையுங்கள்."*

இன்னொரு இடத்தில் சீமான் *'ஜெயலலிதா மார்க்கெட் போன நடிகை, கலைஞர் மார்க்கெட் போன கதையாசிரியர்'* என கிண்டலடிக்க அதையே முகப்புத்தக பதிவர் ஒருவர் *"சீமான் அண்ணே..! நாம மட்டும் என்ன, அவதார்–2 டைரக்ட் பண்ணியதைப் பாதியோட விட்டுட்டா அரசியலுக்கு வந்தோம்?"* என சீமானைக் கலாய்த்தார்.

கவனித்துப் பார்த்தால் ஒன்று புரியும். சீமான் ஆதரவாளர்கள்தான் முகப்புத்தகத்தை நன்கு பயன்படுத்தி பிரசாரம் செய்கிறார்கள். சீமானின் ஆதரவாளர்கள் இளையர்கள் என்பதால் அது சாத்தியமாகியிருக்கிறது... யாருக்குத் தெரியும்.... ஆனைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வருமல்லவா...! சரி... சரி...இப்போது முகப்புத்தகத்தில் நான் படித்த ஒரு மருத்துவக் குறிப்பைத் தருகிறேன்.

ஆநெய்யை அதாவது பசு நெய்யை நாற்பது வயது வரை தாராளமாக உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ('ஆ" என்பதற்கு பசு என்று பொருள் உண்டு.) ஆனால் நாற்பது வயதுக்குமேல் பசுவின் நெய்யைப் படிப்படியாக குறைத்துக் கொள்ளவும் வேண்டும். ஆநெய்யை குறைக்காமல் சாப்பிட்டு வந்தால் கொழுப்பு சத்து உடலில் சேர்ந்து மாரடைப்பு வர வாய்ப்பு அதிகம் உள்ளது. அதனால் நாற்பது வயதுக்குமேல் நெய்யை சுருக்கி தேனை கூடுதலாகச் சாப்பிட வேண்டும். தேன் எளிதில் ஜீரணமாவது மட்டுமல்ல மருத்துவ குணம் நிறைந்ததுமாகும். அதனால் ஆநெய்க்குப் பின் 'பூ'வில் இருந்து எடுக்கக்கூடிய பூநெய்யை அதாவது தேனை சாப்பிட வேண்டும். ஆநெய்க்கு ஒரு காலம் வந்தால் பூநெய்க்கு ஒரு காலம் வரும். இது எப்படி இருக்கு? நாம் தமிழர்டா....●



இரா. சம்பந்தன்

# உண்மைகள் இரண்டு உவமையோ ஒன்று!

வான் நிலவு கீழறங்கி வந்து விளையாடுகின்ற மீன் திரியும் வாவியது. கொட்டிக் கொடியும் கொடி பிடிக்கும் தாமரையும் கட்டிப் பிடித்தங்கே கதைபேசும் நெய்தலுமாய் எட்டிப் பார்ப்போர்க்கு எழில்காட்டும் குளமதிலே பெட்டைப் பறவையினப் பேடுகளும் அவையோடு தொட்டுக் கதைபேசித் துள்ளும் ஆணினமும் குட்டிச் சிவப்பும் குயில் போல இளங்கறுப்பும் தட்டில் கரைத்தெடுத்த தயிர் போன்ற வெண்மையிலே இட்டுத் தெளித்தெறிந்த இளமஞ்சள் சந்தணமாய் பட்டுச் சிறகிடையே பலவண்ணப் புள்ளிகளும் கட்டிக் கொண்டங்கே குரல் காட்டும் குஞ்சுகளும் என்று பறவைக் குடும்பங்கள் பல வாழும் நீருலகம்.

நாடு விட்டு நாடு செல்லும் நடுக்காட்டு வழியினிலே வாடி விட்ட முகம் மலர நடனமிடும் பொய்கையினைத் தேடிவந்து தான் பார்ப்பாள் அந்தத் தென்நாட்டின் தமிழ்க்கிழவி. மூதுரையின் பேராலே மூன்றுநிலத் தமிழரசை தீதகற்றிக் காப்பாற்றும் தெய்வத் திருமடந்தை ஔவை எனும் பெயர் கொண்டாள். சுட்டபழம் வெண்டுமென்று சுவாமியிடம் கேட்டதனால் சூடுபெற்றுப் பின் வாழ்வில் கெட்டதெலாம் தீண்டாத கேடற்ற உருவத்தாள்.

கரையெங்கும் நாணலது கைகோர்த்து அரண் செய்ய அங்கு நிரை செய்து தவளையினம் நெடுந்தாளில் ஒளித்திருக்க நுரைபொங்கும் நீர்ப்பரப்பில் மீன் நடத்தும் திருக்கூத்தை நரைகொண்ட தன்தலையில் நடுங்கும் கைசாத்திப் பறவைக்குலம் இரை கொள்ள இதையெல்லாம் இறைவனவன் ஏன் படைத்தான் என்பாள் கிழவியவள். என்றாலும் பார்த்திடுவாள். இதயம் மகிழ்ந்திடுவாள்.

காலமெலாம் தாமரையும் தண்ணீரும் மீன்களுடன் கோலமிட்ட பறவைகளும் குவிந்திருந்த பொய்கையிலே ஒரு காலம் வானம் பொய்த்து வழி-யெல்லாம் மரம் செத்து நாணல் சரிந்து நாற்புறமும் புதர் மண்டிப் பொருந்திக் கிடந்த பொல்லாத பறவையெலாம் விருந்தைத் தேடி வேறுகுளம் ஓடிவிடப் பருந்தின் இறக்கையெனப் பழுத்துவிட்ட இலைகளுடன் வருந்தி நீருக்காய் வாழ்விழந்து தவமிருக்கும் நீர்க் கொடிகள் கண்டாள். நெடுந்தமிழின் ஆச்சியவள்.

நீரில்லைக் குளத்தில். நின்று பிடிப்பதற்கும் மீனில்லை அதனாலே பறவையெலாம் அந்த ஊரில்லை என்பதனை கிழவி உளம் கொண்டாள். பலன் கிடைத்த காலமெல்லாம் படிந்திருந்து பின்நாளில் வளமிழந்த குளம் விட்டுப் பறவையெலாம் போனாலும் நீர்க் கொடிகள் போகவில்லை. அதையும் நினைத்தாள் ஔவையவள் கணப் போதில்.

ஆதாயம் இருந்தால் அருகிருந்து சுவைத்துவிட்டு அதிலேதும் குறைவந்தால் அகன்றுவிடும் தன்மையெலாம் அழகான உறவா அழுக்கான உறவன்றோ கூடி இருந்தவர்க்குக் குறை வந்தால் ஓடாமல் வாடி அவரோடு வாழ்ந்திருத்தல் அது தானே உறவு முறை.

பகுத்தறிவு இல்லாத பறவைகள் தான் என்றில்லை சில வகுத்துரைக்க முடியாத மானுடரும் அப்படித்தான். நல்ல இடம் என்றால் நாலுமுறை வருவார்கள். நன்மை கிடைக்கும் என்றால் நாள் முழுதும் இருப்பார்கள். கிடைக்கும் பலன் குறைந்தால் கிட்ட நெருங்கார்கள். எட்டிப் போய் விடுவார் எத்தனையோ பொய் சொல்லி. காலம் மாறும். கலைந்ததெலாம் கூடாகும். கோலம் குலைந்ததெலாம் கோபுரமாய் எழுந்துவிடும் என்பதெலாம் நினையார்கள். எழுந்தே போய்விடுவர்.

தண்ணீர் குளம் தந்த தண்பொழுதில் அழகாக கண்ணில் தெரிந்த நீர்கொடிகள் இன்றைக்கு மண்ணில் நீர்வற்றிக் குளம் கிடக்கும் போதினிலும் அகலாமல் தாமும் அதனோடு அருகிருந்து துன்பம் சுமந்து குளம் போல அழகிழந்து சாவதனைப் போலன்றோ சரியான உறவமையும். துன்பத்தில் கைவிடாத் துணையன்றோ மெய்யுறவு.

பாடவேண்டும் இதை நான் பழுதான உறவகல. ஏடு எடுத்தாள் கிழவி. எழுதினாள் இப்படித்தான்.

> அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
> உற்றுழித் தீர்வார் உறவல்லர்-அக்குளத்திற்
> கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
> ஒட்டி யுறுவார் உறவு.

அற்ற குளத்தின் - நீர்வற்றிய குளத்தினின்றும், அறு - நீங்குகின்ற, நீர்ப்பறவைபோல் - நீர்வாழ் பறவைகள்போல, உற்றுழி - வறுமை வந்தபொழுது, தீர்வார் - நீங்குவோர், உறவு அல்லர் - உறவி-னராகார் அக்குளத்தில் - அந்தக் குளத்திலுள்ள, கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல - கொட்டியும் அல்லியும் நெய்தலும் போல, ஒட்டி உறுவார் - நீங்காது சேர்ந்திருந்து வருத்தத்தை அனுபவிப்போரே, உறவு - உறவினராவர்.

பொதுவாக புலவர்களும் கவிஞர்களும் ஒரு காட்சிக்கு பல உவமைகளைத் தான் காட்டியிருக்கிறார்கள். ஆனால் ஔவை ஒரு உவமையிலேயே இரண்டு செய்திகளைச் சொல்லி இருக்கிறாள். காலம் காலமாக குளத்திலே தண்ணீர் இருக்கும் போது பறவைகள் வருவதும் கொடிகள் பூப்பதும் குளம் வற்றினால் பறவைகள் போய் விடுவதும் தாமரைக் கொடிகள் நீரின்றிக் காய்வதும் எல்லோரும் காணும் காட்சி தான். ஆனால் அதை உண்மை உறவுக்கும் பொய் உறவுக்கும் உவமையாக்கிக் காட்டும் சிந்தனை யாருக்கும் வரவில்லை.

ஔவையின் எந்தப் பாடலை எடுத்துக் கொண்டாலும் சனங்களுக்கு நன்கு தெரிந்த செய்திகளையே தான் சொல்ல வரும் கருத்துக்கு உவமையாகக் கையாளும் உத்தியை அங்கே காணலாம்.●

## றொறன்ரோவில் நிருஜனின் இன்னிசை விருந்து




சங்கீத ஆசிரியை பராசக்தி விநாயகதேவராஜாவின் சக்தி சங்கீத அக்கடமி இன்னிசை விருந்து நிகழ்ச்சியொன்றை கடந்த மாதம் 15ம் திகதி ஸ்காபரோ கலையரங்கத்தில் நடத்தியது. விஜய் தொலைக்காட்சியின் சுப்பர் சிங்கர் ஊடாக புகழ்பெற்ற ஜேர்மனியில் வசிக்கும் எஸ்.நிருஜன் இங்கு மூன்று மணிநேர இன்னிசை விருந்து வழங்கினார். கர்நாடக இசையோடு மெல்லிசைப் பாடல்களையும் வழங்கி சபையோரை அவர் மகிழ்வித்தது சிறப்பாக அமைந்திருந்தது. திருமதி தனதேவி மித்திரதேவா, வாசுதேவன் ராஜலிங்கம் மற்றும் சஜீவ் விஜயகுமார், ரமணா இந்திரகுமார், நிதுா'ன் இதயராஜன் ஆகியோர் நிகழ்ச்சிக்கு வாத்திய இசை வழங்கினார்கள். நிகழ்வின்போது நிருஜனும் மற்றும் கலைஞர்களும் மேடையில் மதிப்புச் செய்யப்பட்டனர்.

## கிளீவ்லான்டில் 39வது ஆண்டு தியாகராஜ ஆராதனை




அமெரிக்காவிலுள்ள கிளீவ்லான்டில் 39வது ஆண்டாக தியாகராஜ ஆராதனை நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. அண்மையில் காலமான புல்லாங்குழல் வித்துவான் ரமணி அவர்களுக்கான புகழ் வணக்க நிகழ்வாகவும் சில நிகழ்ச்சிகள் இங்கு இடம்பெற்றன. கனடாவிலிருந்து முன்னைய ஆண்டுகளைப்போல இவ்வருடமும் புல்லாங்குழல் வித்துவான் அஜந்தி மதனாகரன் விழாவில் கலந்து கொண்டு புல்லாங்குழலிசை வழங்கி தமது குரு ஸ்ரீரமணி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

## மட்டக்களப்பு பாடும் மீன்களின் றொறன்ரோ நிகழ்வு




மட்டக்களப்பு பெரிய புல்லுமலை மக்களின் மீள்குடியேற்றத்துக்காக றொறன்ரோவில் இயங்கும் பாடும் மீன்களின் நிகழ்வு கடந்த மாதம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வரி ஆலோசகர் தவா இளையதம்பி கனடிய சட்டத்தரணி மெலனி டேவிட், வீடு விற்பனை முகவர் தாம் சிவதாசன் ஆகியோர் சிறந்த சமூக சேவையாளர்களாக கௌரவிக்கப்பட்டனர். இசை நிகழ்ச்சி உட்பட நடனம் நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# எலிசபெத் மாகாராணியின் 90வது பிறந்தநாள் நான்கு தலைமுறைகளின் அபூர்வ சந்திப்பு



இங்கிலாந்தின் முடிக்குரிய எலிசபெத் மாகாராணியின் 90வது பிறந்தநாள் கடந்த மாதம் 21ம் திகதி கொண்டாடப்பட்டது. இதனையொட்டி மகாராணியார் தமது அடுத்த மூன்று தலைமுறையினருடன் எடுத்த ஒளிப்படம் வெளியிடப்பட்டது. இந்தப் படத்தில் மகாராணியாரின் புதல்வர் சார்ள்ஸ் (68), அவரின் புதல்வர் வில்லியம் (33), அவரின் புதல்வர் ஜோர்ஜ் (02) ஆகியோர் இளவரசர்கள் என்ற பெருமைப் பட்டத்துடன் ஒன்றாகக் காணப்படுகின்றனர்.

# தமிழகத் தேர்தலும் ‘ஆனந்த விகடனும்’








மொத்தம் 234 தொகுதிகளைக் கொண்ட தமிழக சட்டசபைக்கு இந்த மாதம் 16ம் திகதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறுகின்றது. கடந்த 29ம் திகதியுடன் வேட்புமனுத் தாக்கல்கள் முடிவுற்றன. இங்குள்ள வாக்காளர்கள் எண்ணிக்கை ஐந்து கோடியே முப்பத்தொன்பது இலட்சத்து பதினைந்தாயிரத்து நானூற்றி எண்பத்திரண்டு. இதில் தொன்னூற்றியேழு இலட்சம்பேர் புதிய வாக்காளர்கள். இங்கு ஆண்கள் இரண்டு கோடியே எண்பத்தெட்டு இலட்சத்துப் பதினேழாயிரம். பெண்கள் தொன்னூறு இலட்சத்து தொன்னூற்றி மூவாயி–ரம். இந்தத் தேர்தல் தொடர்பாக ஆனந்த விகடன் சஞ்சிகையில் அவ்வப்போது வெளிவந்த சில சித்திரங்கள் இங்கு நன்றியுடன் இடம்பெற்றுள்ளன.





# தமிழ் ஊடகவியலாளருடன் ஒன்ராறியோ எதிர்கட்சித் தலைவர்






ஒன்ராறியோ மாகாண அரசின் எதிர்கட்சித் தலைவர் பற்றிக் பிறவுண் கடந்த மாதம் ஸ்காபரோவிலுள்ள ஜேசி விருந்தினர் மண்டபத்தில் இங்குள்ள தமிழ் ஊடகவியலாளர்களை ஒரு மாலைப்பொழுதில் அழைத்து அவர்களுடன் கலந்துரையாடி இரவுப் போசனம் வழங்கி அவர்களின் சேவையைப் பாராட்டி சான்றிதழ்களும் வழங்கி மதிப்பளித்தார். இந்நிகழ்வில் ஒன்ராறியோ கன்சர்வேடிவ் கட்சியைச்சார்ந்த தமிழ்ப் பிரமுகர்கள் சிலரும் பங்குபற்றினர். சில ஊடகவியலாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும்போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்களை இங்கு காணலாம்.

(ஒளிப்படங்கள் - சாய்பிருந்தன் ராஜ்குமார்)











# யுனைட்டற் விளையாட்டுக் கழகத்துக்கு மீண்டும் ஒரு வெற்றிக் கிண்ணம்


கடந்த மாதம் 9ம் 10ம் திகதிகளில் ரொறன்ரோவில் நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணத்தின் 14 வயதுக்கு உட்பட்டோருக்கான தடகள சம்பியன் போட்டியில் ஆறாவது வருடமாக யுனைட்டற் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. 46 விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த 600க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் இதில் கலந்து கொண்டனர். வெற்றிக் கிண்ணத்தைப் பெற்ற யுனைட்டற் விளையாட்டுக் கழகம் 412 புள்ளிகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது இடத்தைப் பெற்ற விளையாட்டுக் கழகம் இவர்களைவிட 158 புள்ளிகள் குறைவாகப் பெற்றது.



# ஈழநாடு பத்திரிகையின் 23வது ஆண்டுவிழா இசையரசி எஸ். மஹதியின் சங்கீத அமுதம்
















ரி. கே. பரமேஸ்வரனை பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ஈழநாடு பத்திரிகையின் 23வது ஆண்டுவிழா பிரபல தென்னிந்திய பாடகி இசையரசி எஸ். மஹதியின் சங்கீத இசையமுதம் நிகழ்ச்சியாக ஸ்காபரோ ஆர்மினியன் மண்டபத்தில் கடந்த மாதம் 24ம் திகதி நடைபெற்றது. இசையமுதம் நிகழ்ச்சிக்கு முன்னதாக நகுலராஜா சகோதரிகளின் வீரம் நாட்டிய நாடகம் இடம்பெற்றது. வாழ்த்துரை, சிறப்புரை, பிரதம விருந்தினர் உரை என்று முக்கிய உரைகளும் இடம்பெற்றன. இந்நிகழ்ச்சிக்கான பக்கவாத்தியக் கலைஞர்களாக தென்னிந்தியாவின் பிரபல கலைஞர்கள் மஹதியுடன் வந்திருந்தனர். இந்நிகழ் வின்போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்களை இங்கு காணலாம். (படங்கள்: குணா - செய்தி இணையம்)













# அழியா நினைவுகளுடன் 27 ஆண்டுகள்
# என்றும் இதயத்துள் வாழ்பவன்!



தனயனாக
05-05-1970

தந்தைக்காக
10-05-1989

## செல்வன் எஸ். தி. அகிலன்

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவன்
கல்லூரி கிரிக்கெட் அணித் தலைவன்; விளையாட்டு வீரன்

ஈழத்தமிழரைக் காக்கவென வந்த இந்திய அராஜகப் படையாலும்
அதற்குத் துணைபோன தமிழின துரோகக் கும்பலாலும்
தாய்மண்ணில் பத்திரிகைச் சுதந்திரத்துக்காகப் போராடிய
தந்தைக்காகப் பலியெடுக்கப்பட்ட பாலஅபிமன்யு.

ஒரு'மே'யில் வந்தாய் மண்ணுலகம் எம்அகிலா!
ஒரு'மே'யில் சென்றாய் விண்ணுலகம் எம்முயிரே!
ஆண்டிருபத் தேழுகளில் அரைநொடியும் நம்மனத்தில்
மீண்டதில்லை நிம்மதியே! வெந்துவெந்தே இயங்குகிறோம்!
என்ஆன்மா சாந்திபெற என்னப்பா என்னம்மா
அன்னைமண் துன்பங்கள் அகலஉழைப் பீரென்று
அந்தரங்கத்தில் நாளும் அழுதுநிற்கும் எம்நிதியே!
அந்திமத்திலும் உன்னை அஞ்சலித்து அழுகின்றோம்!

அம்மா, அப்பா
குடும்ப உறவினர்கள், நண்பர்கள்
416.920.9250

MMUCC URGENT CARE

# Markham McNicoll Urgent Care Centre & Family Clinic

MMFC FAMILY CARE

**416.609.3333 www.mmucc.ca**

2901 Markham Road, Unit #11, Scarborough, ON. M1X 0B6

**குடும்ப மருத்துவர் Dr. சுகந்தி இரவீந்திரன் B.Sc., MD., ABFM**
**புதிய நோயாளர்களை தற்பொழுது ஏற்றுக் கொள்கிறார்.**

## மருத்துவ சேவைகள்

- வெளி நோயாளர் பிரிவு ( Walk in Clinic )
- விரைவு மருத்துவம் ( Urgent Care )
- குடும்ப மருத்துவம் (Family Practice)
- ஆய்வு கூட வசதி (Lab Services for our Patients only)



## எமது மருத்துவ நடுவத்திலுள்ள பிற மருத்துவ சேவைகள்

- மருந்தகம் ( Pharmacy)
- இயன் மருத்துவம் ( Chiropractic, Massage Therapy & Physiotherapy) )
- பல் மருத்துவ சேவை (Dental Clinic)
- கண் மருத்துவ சேவை (Optometry)
- மற்றும் பிற மருத்துவ சேவைகள் (Many more Medical Services)



*** ஆண்டின் 365 நாட்களும் திறந்திருக்கும்**

Developed and Managed by :

MEDCENTRE CONNECT
SYNCHRONIZING HEALTH SECTORS

MARKHAM RD
McNICOLL AVE

மார்க்கம் மக்நிக்கல் சந்திப்பில் அமைந்துள்ளது.


நியூ ரங்கனாஸ்
நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
May
8th & 9th
2016
அக்சய திதியை முன்னிட்டு
நியூரங்கனாஸ் வழங்கும்
மாபெரும்
மலிவு விற்பனை
அனைத்து தங்க நகைகளையும்
மிகக் குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளவும்.
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
6055 Steeles Ave E Unit C102, Scarborough, ON., M1X 0A7
Tel: 416-613-4926 / 647-702-2159


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
முதலாவது கனடியத்தமிழ் Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
Looking for a Career change?
Freedom, Flexibility and
Unlimited income potential
Give us a Call today
Chandran Rasalingam CHS
President & CEO
Dir: 416 909 0400
INFORCE LIFe
Financial Services Inc.
Bus: 416 321 6000 x400
www.inforcelife.com
career@inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6
Like us on Facebook
printfast.ca


CELEBRATING 25 Years
New Career...
New Confidence...
COMPUTEK COLLEGE
EST. 1991
BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY
Registered as a Private Career College under the Private Career Colleges Act. 2005
DIPLOMA COURSES
Enterprise Network Engineering 50 wks
Community Services Worker 50 wks
Integrated Application Development 50 wks
Early Childcare Assistant 38 wks
Personal Support Worker 32 wks
Accounting & Payroll Administration 35 wks
Medical Office Administration 28 wks
Network Engineering 35 wks
Computerized Accounting 26 wks
Business Administration 26 wks
Take a look at Our Website:
WWW.COMPUTEK.EDU
LAID OFF OR UNEMPLOYED?
Second Career and other financial assistance may be available for those who qualify.
Call for details
NEW 20,000 sq ft LOCATION
Toronto Campus 400-2425 Eglinton Ave E.
Eglinton/Kennedy 416-321-9911
Markham Campus 202-7 Eastvale Dr.
Markham/Steeles 905-471-3344



லீலா சிவானந்தன்

# இளைய தலைமுறையின் ஆன்மிகச் சிந்தனை

மனிதனுடைய மனதைக் கட்டுப்படுத்தி சமூகத்தில் கட்டுப்பாட்டைக் காக்கவும் ஒழுக்கத்தை வளர்க்கவும் அடிப்படையாக அமைகின்றது ஆன்மிக உணர்வு. இங்கே ஆன்மிகம் என்று சொல்லும் போது ஆன்மா பற்றி அறிவது ஆன்மிகம் எனலாம். இன்னுமொரு வகையில் சொல்லப் போனால் தன்னை அறிதல், தனக்குள்ளே இருக்கும் ஆன்மாவை அறிதல் என்று கூறலாம். தன்னை அறியத் தனக்கு ஒரு கேடில்லை என்பார் திருமூலர். இத்தகைய ஆன்மிக உணர்வை வளர்க்க ஆலயங்கள் வழிபாடுகள் போன்றவை உதவுகின்றன.

புலம்பெயர் தேசங்களில் குறிப்பாக கனடாவில் அதிலும் ஈழத்தமிழர் அதிகமாக வாழும் ரொறன்ரோ மற்றும் மொன்றியல் மாநிலங்களில் ஆலயங்கள் பல உள்ளன. இங்கெல்லாம் திருவிழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றோர் அங்கு கிறிஸ்தவ தேவாலயங்களைக் கட்டியது போல தமிழ் மக்கள் போகும் இடம் எல்லாம் ஆலயங்களை எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். தமிழர் அதிகமாக வாழும் ரொறன்ரோவில் வீதிகள் தோறும் ஆலயங்கள், ஆன்மிகச் சங்கங்கள் உள்ளன. இவை மக்களிடையே சமய விழிப்புணர்ச்சியை அதன் மூலம் ஆன்மிக உணர்வை வளர்ப்பதில் எவ்வளவு பங்கு வகிக்கின்றன?

கோவில்கள் அதிகரிப்பதும் மக்கள் கூட்டம் கூட்டமாக கோவிலுக்குச் செல்வதும் வழிபாடு இயற்றுதலும் மிகவும் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெறுகின்றன. கலைகளைப் பேணிக் காக்கும் நோக்கமாக ஆலயங்கள் கலைநிகழ்ச்சிகள், கலாசார நிகழ்வுகள் நடத்தி வருவதுடன் தமிழ்ப்பண்பாட்டின் விழுமியங்களைக் காப்பதிலும் பெரும் பங்காற்றி வருகின்றன. அதே வேளை ஆன்மிக வழியில் மக்களைக் கொண்டு செல்லும் வகையில் குறிப்பாக இப்போதைய இளைய தலைமுறையையும் எதிர்கால சந்ததியினரையும் வழிநடத்தும் வகையில் கோயில்களின் பங்கு குறிப்பிடத் தக்கதாக அமைந்துள்ளதா? கலை கலாசார வளர்ச்சிக்கு, ஆன்மிக வளர்ச்சிக்கு எந்தளவு உதவுகின்றன?

இளைய தலைமுறையினர் கல்வியில் கலைகளில் காட்டும் நாட்டத்தை, ஆர்வத்தை ஆன்மிக வளர்ச்சியில் காட்டுகின்றார்களா? இவர்கள் எதிர்காலம் பண்பட்டதாக அமைய உதவும் ஆன்மிகப் பாதையில் செல்கின்றார்களா? அல்லது அவர்கள் அவ்வாறு செய்வதற்கு உதவும் வகையில் வழிகாட்டப்படுகின்றதா? 1980களில் புலம் பெயர்ந்த தமிழர்கள் மொழியிலும், சமயத்திலும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்களாக இருந்தார்கள். இவர்கள் தமிழ்ச் சமுதாயத்தைப் பிரதிபலிப்பவர்களாகவும் இருந்தார்கள். பிரச்சனைகள், சண்டைகள், சச்சரவுகள் இருந்தாலும் மொழியையும், சைவத்தையும் அதனுடன் இணைந்த கலைகளையும் வளர்ப்பதற்குப் பெருமுயற்சி எடுத்தனர்.

இவர்கள் அனைவருமே பாடசாலை, மற்றும் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் படித்துக் கொண்டிருந்தவர்களும், அப்போதுதான் பட்டப் படிப்பை முடித்தவர்களும், வேலை செய்து கொண்டிருந்தவர்களுமான இளம் பருவத்தினரே. எல்லா வசதிகளும் உடைய நாடாக இருந்தாலும் அடிப்படை வசதிகள் கூடக் கிடைக்காத சூழலில் புதிய இடம், புதிய மொழி, நடுங்கும் குளிரையுடைய காலநிலை, அடுத்து என்ன செய்வது என்று தெரியாத உணர்வு, மனத்தில் விரக்தி இவ்வாறான மிகமிக இக்கட்டான சூழலில் தம்மையும் பாதுகாத்து, தம் குடும்பத்தவரையும் பாதுகாத்து, இனம், மொழி, பண்பாடு, சமயம் ஆகியவற்றையும் பேணிப் பாதுகாத்துத் தம்மால் முடிந்தவரை ஏனையோருக்கும் உதவி, வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டு முன்னேறினார்கள். மொன்றியலில் 1983ஆம் ஆண்டு தொடங்கிய தமிழர் ஒளி இவர்களுக்கு அரசாங்கத்தின் வசதி-களைப் பெற்றுக் கொடுத்தது. ஆங்கில, பிரெஞ்சு வகுப்புகள், கணினி வகுப்புகள், தையல் வகுப்புகள் போன்றவற்றை ஆரம்பித்து வேலைவாய்ப்பையும் பெற உதவியது. சிறுவர்களுக்கான தமிழ் வகுப்பு ஆரம்பித்து மொழியைக் காக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார்கள். வானொலி நிகழ்ச்சி ஆரம்பித்து மக்களுக்குப் பயனுள்ள தகவல்களைத் தெரிவித்தார்கள். மேடை நிகழ்ச்சிகள் பல நடத்தினார்கள்.

1985இல் தொடங்கப்பட்ட கியூபெக் சைவமகாசபை சமயத்தையும், ஆன்மிகத்தையும் வளர்க்கும் பணியைக் கையில் எடுத்தது. இந்தச் சபையின் தளராத முயற்சியின் பயனாக மொன்றியல் திருமுருகன் கோயில் ஆன்மிகப் பணி ஆற்றி வருகின்றது. பின்னர் நிறையக் கோயில்கள், ஆன்மிகச் சங்கங்கள், தமிழ்க் கல்லூரிகள் எல்லாம் வந்தாலும் ஆரம்பத்தில் இவர்கள் பலவித சிக்கல்களுக்கிடையே இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.


இன்றும் இவர்கள் தம் கலாசாரத்தைப் பேணி வருகின்றனர். இவர்கள் கட்டிக் காத்த, காத்துவரும், மதம், மொழி அழிந்து போகாமல் இனிவரும் தலைமுறை தமிழைப் பேணுமா, சைவத்தைக் கடைப்பிடிக்குமா? ஆன்மிக வழியைப் பின்பற்றுமா?

இப்போதைய இளைய தலைமுறை அறிவுள்ளவர்களாக இருக்கின்றார்கள். சிந்தனைத் தெளிவுடன் முடிவு எடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இன்றைய சிறார்கள் தமிழைப் பெற்றோரின் தூண்டுதல் காரணமாகப் படிக்க வருகிறார்கள் என்றும், அவர்கள் விரும்பிப் படிப்பதில்லை என்றும், உச்சரிப்பு பலருக்கும் சுத்தமாக இல்லை என்பதும் பெரும்பாலான தமிழ் ஆசிரியர்களின் கருத்தாக இருக்கிறது. விதிவிலக்குகள் உண்டு என்பதை நாங்கள் மறுக்க முடியாது. எத்தனை பேருக்குத் திருமுறை தெரியும். எத்தனை பேர் திருக்குறள் தமிழில் படிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். தமிழில் உள்ள ஆன்மிக நூல்கள் பாடநூல்கள் ஆக்கப்பட வேண்டும். பெற்றோர் பிள்ளைகளின் ஒழுக்கத்தில் அக்கறை காட்ட வேண்டும். சமயத்திலும், மொழியிலும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். இப்போது மட்டுமல்ல என்றும் என்றென்றைக்கும்

→

**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB


சைவமும் தமிழும் தளைத்தோங்க வேண்டும். தங்களுக்குச் சரி என்று பட்டதைத் திடமாகப் பின்பற்றுகிறார்கள். இவர்களைச் சரியான முறையில் பண்டைய மரபுகள், சமயம் சார்ந்த பழக்க வழக்கங்கள், ஆன்மிகப் பயிற்சியில் ஆர்வம் போன்றவற்றை அவர்களுக்கு ஊட்ட வேண்டும். யோகா பயிற்சி மட்டுமே ஆன்மிகமல்ல. ஆன்மிகம் என்பது புறத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டதுமில்லை. அது அகம் சார்ந்தது. அக அழகு அனைத்தையும் அழகாக்கும். இளையோருக்கு ஏற்படும் சந்தேகங்களைப் போக்க வேண்டும். இப்பொழுது ஓரளவுக்கு இது நடைபெறுகின்றதெனினும் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டியிருக்கின்றது. மொன்றியலில் தமிழர் ஒளியால் 80பதுகளில் நடத்தப்பட்ட முதலாவது தமிழ்ப்பாடசாலையும், ரொறன்ரோவில் கனடா சிவதொண்டன் நிலையத்தினால் 90 களில் நடாத்தப்பட்ட சைவத்தமிழ்ப் பாடசாலையும் ஓரளவுக்கு சிறுவர்களிடையே ஆன்மிகத்துக்கான அறிமுகத்தை கொடுத்தது எனலாம்.

அந்த வகையில் ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டு முறைகளை அப்படியே ஏற்றுக் கொள்ள இப்போதைய தலைமுறையினரின் அறிவு அனுமதிப்பதில்லை. எதையுமே ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் ஆராய்கின்றனர். உள்ளர்த்தத்தை அறிந்து கொள்ள விரும்புகின்றார்கள். தெளிவான பதில் கிடைக்காதவிடத்து இதில் பயன் இல்லை என்று நினைத்து விலகிச் செல்கின்றார்கள். இதேவேளை இப்போது தமிழ் மொழியைப் பயிலவரும் மாணவர்களின் ஆர்வம் குறைந்து கொண்டே வருகின்றது என்பதை சமூக ஆர்வலர்களும், தமிழ் ஆசிரியர்களும் கவலையுடன் பார்க்கிறார்கள். மொழி அழியும்போது தமிழர்களின் அடையாளம் அழிந்து விடும். நிலைமை இவ்வாறு இருக்கும்போது அடுத்த தமைுறை இவற்றை அதற்கு அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லுமா? அவர்கள் தம் காலத்தில் பேணிக் காப்பார்களா? அவர்களின் குழந்தைகளுக்கு இவற்றை எடுத்துச் செல்வதில் ஆர்வம் காட்டுவார்களா? அப்படி ஆர்வம் காட்டும் தம் குழந்தைகளுக்கு அவற்றைச் சொல்லிக் கொடுக்கும் தகுதியும் திறமையும் அவர்களுக்கு இருக்குமா?

இவ்வாறு நிறையவே கேள்விகள் எழுகின்றன. ஆரம்ப காலத்தில் மொழி கலாசாரம் பண்பாடு சமயம் இவை தம் பிள்ளைகளுக்குத் தேவை என்று கருதி ஆர்வம் காட்டிய பெற்றோர் காலம் போகப் போக சமுதாய ரீதியில் வளர்ச்சி அடைய அடைய புறச் சூழலின் ஆதிக்கத்தினால் தம் பிள்ளைகள் சமய கலாசார விழுமியங்களை மறந்து வாழும் சூழலுக்கு ஆட்பட்டு விடக்கூடிய ஆபத்து ஏற்படலாம் என்பதை உணர வேண்டும். அவ்வாறு ஏற்படாமல் தடுப்பது பெற்றோர், சமூக, தமிழ் ஆர்வலர்கள் பொறுப்பாகும். இப்பொழுதும் இவ்வாறான பாராட்டத்தக்க முயற்சிகள் பரவலாக இடம்பெற்றாலும் இவ்விடயத்தில் இன்னும் தீவிரம் தேவை என்பதே சமூக ஆர்வலரின் கருத்தாகும்..●







| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கார்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கார்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

# 20/20 கிரிக்கெட் உலகக் கிண்ணம் மேற்கிந்திய அணி சாதனை

கார்லஸ் பிரத்வெயிட் கடைசி ஓவரில் அடுத்தடுத்து நான்கு சிக்ஸர்கள் விளாசியதன் மூலம் இங்கிலாந்தை 4 விக்கெட்டுகளால் வீழ்த்திய மேற்கிந்திய அணி இருபது – 20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இதன்மூலம் இருபது-20 உலகக் கிண்ணத்தை இரண்டு தடவைகள் வென்ற முதல் அணியாகவும் மேற்கிந்திய தீவுகள் சாதனை படைத்தது.

கொல்கத்தா ஈடன் காடன் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மேற்கிந்திய அணி வெற்றிபெற கடைசி ஓவருக்கு 19 ஓட்டங்களை பெறவேண்டிய நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அப்போது பந்துவீச வந்த பென் ஸ்டொக்ஸ் போட்ட முதல் நான்கு பந்துகளுக்குமே பிரத்வெயிட் நான்கு சிக்ஸர்களை அடித்து அதிர்ச்சி அளித்தார். இங்கிலாந்து அணி போட்டியில் ஆதிக்கம் செலுத்தியபோதும் கடைசி ஓவரில் அந்த அணியின் உலகக் கிண்ண எதிர்பார்ப்பு கைநழுவிப் போனது.



போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற மேற்கிந்திய அணி இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது. இதன்படி களமிறங்கிய இங்கிலாந்து 23 ஓட்டங்களை பெறுவதற்குள் முதல் மூன்று விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. தொடரில் சோபித்து வந்த ஜேசன் ரோய் பத்ரி பந்தில் விக்கெட்டை பறிக்கொடுத்தார். அடுத்த ஓவரில் மற்றொரு ஆரம்ப வீரரான ஹெல்ஸ் ஆட்டமிழந்ததும் இங்கிலாந்து அணி அதிர்ச்சியடைந்தது. அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் மோர்கன் பத்ரி பந்தில் பிடிகொடுத்தார்.

இதனை அடுத்து இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் ஜோ ரூட்டும், ஜோஸ் பட்லரும் அணியை சரிவில் இருந்து மீட்டனர். சுலைமான் பென் வீசிய ஓவரில் பட்லர் இரண்டு சிக்ஸர் அடித்து ஓட்ட வேகத்தை கூட்டினார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக பட்லர் 34 ஓட்டங்கள் எடுத்திருந்த போது பிரத்வெயிட் பந்து வீச்சில் பிடிகொடுத்தார்.

இதனால் அணியை காப்பாற்ற வேண்டிய முழு பொறுப்பும் ஜோ ரூட் மீது விழுந்தது. ஆனால் மோசமான முறையில் பந்தை அடித்த அவர் 54 ஓட்டங்களில் வெளியேறினார். இதனை அடுத்து களமிறங்கிய வீரர்கள் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததால், இங்கிலாந்து அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்கள் எடுத்தது. ரூட் பெற்ற 54 ஓட்டங்களுமே அதிகபட்சமாகும். மேற்கிந்திய அணி சார்பில், பிராவோ, பிரத்வெயிட் ஆகியோர் 3 விக்கெட்டுகளும், பத்ரி 2 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய அணியும் ஆரம்பத்தில் தடுமாறியது. பெரியதாக எதிர்பார்க்கப்பட்ட கிறிஸ் கெயில் 4 ஓட்டங்களையே பெற்றார். மற்ற ஆரம்ப துடுப்பாட்ட வீரரான ஜோன்ஸன் சார்ல்ஸ் ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார். பின்னர் வந்த லென்ட்ல் சிம்மன்ஸ் பூஜ்யத்தில் வெளியேற மேற்கிந்திய அணி 11 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளை இழந்தது.

எனினும் அனுபவ வீரர் மார்லன் சாமுவேல்ஸ் ஒருமுனையில் நின்றுபிடித்து ஆடி மேற்கிந்திய அணியை கடைசி ஓவர் வரை வெற்றியை நோக்கி அழைத்து வந்தார்.

இதன்போது பிராவோ மற்றும் சாமுவேல்ஸ் இணைந்து 4 ஆவது விக்கெட்டுக்கு 75 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். பிராவோ 27 பந்துகளில் 25 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். பின்னர் வந்த அன்ட்ரே ரஸ்ஸல் மற்றும் அணித்தலைவர் டெரன் சமி ஆகியோரும் நின்றுபிடிக்காமல் வெளியேற மேற்கிந்திய அணி தடுமாறியது. என்றாலும் 7 ஆவது விக்கெட்டுக்காக வந்த பிரத்வெயிட்டு அபாரமாக ஆடி மேற்கிந்திய அணியை வெற்றி வரை அழைத்துச் சென்றார்.

இறுதியில் மேற்கிந்திய அணி 19.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 161 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. இதன்போது பொறுப்பாக ஆடிய சாமுவேல்ஸ் 66 பந்துகளில் 9 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 85 ஓட்டங்களை பெற்றார். மறுமுனையில் பிரத்வெயிட் 10 பந்துகளில் 34 ஓட்டங்களை பெற்றார். இதில் அவர் கடைசி நான்கு பந்துகளிலுமே 24 ஓட்டங்களை விளாசியமை குறிப்பிடத்தக்கது.

சிறப்பாக ஆடிய பிரென்டன் சாமுவேல்ஸ் ஆட்ட நாயகன் விருதை வென்றதோடு தொடர் முழுவதும் அபாரமாக ஆடிய இந்திய அணியின் விராட் கொஹ்லி தொடர் நாயகன் விருதை வென்றார்.

மேற்கிந்திய அணி இதற்கு முன்னர் 2012ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இருபது-20 உலகக் கிண்ணத்தில் இறுதிப் போட்டியில் இலங்கை அணியை வீழ்த்தி உலகக் கிண்ணத்தை வென்றது..●


• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

Any Referral Service

JRB Universal Inc.

Almost All Services Available

647 289 6164



R.R. Rajkumar

B.Com (Hons), M.B.A.

• Credit Counseling • Accounting & Tax Services •


Best Catering
நந்தா உணவகம்
NANTHA CATERS
in Town!
நகரில் சுவைகுன்றா உணவுகளுக்கு ஒரே இடம்
416 NANTHA 1 (416 426 8421)
Brimley & Steeles - 4915 Steeles Ave. E.
Warden & Finch -3268 Finch Ave. E.
Kipling & Steeles - 5010 Steeles Ave. E.


BALAN MORTGAGES
Need Money ? Refinance!
2nd Mortgage!!
SAME DAY APPROVAL
2nd MORTGAGE
MORTGAGE ALLIANCE
AUTHORITIES Lic # 12313
Mortgage Agent. License #: M08005440
Call to discuss refinancing,
up to 85% of the value of your home
Residential • Commercial • Investment
balan homes
BUYING, SELLING, LEASING OR INVESTING
Century 21
INNOVATIVE REALTY INC.
Independently Owned And Operated BROKERAGE
Office: 416-298-8383 Fax: 416-298-8303
3 - 2250 Markham Road, Toronto, ON M1B 2W4
Balamurale Nagarajah
Sales Representative
Direct
416-727-3843
balanMTG@gmail.com

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**36 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets




தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**

எஸ். காந்தி

# மத்திய அரசாங்கத்தின் - 2016 வரவுசெலவுத்திட்டம்

கடந்த பங்குனி மாதம் புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அவற்றில் சில முக்கிய அம்சங்களை கவனிப்போம்.

வரிவிதிப்பு விகிதாசாரம் $45,282 லிருந்து $90,563 வரைக்குட்பட்டவர்களின் வருமானவரி 22 சதவீதத்திலிருந்து 20.5 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருக்கின்றது. இதனால் ஒரு தனிநபர் வருடத்துக்கு $330 வரை சேமிக்க முடியும். இதன் மூலம் 9 மில்லியன் கனடியர்கள் நன்மை பெறுவர்கள் என கூறப்படுகின்றது.

அடுத்ததாக முக்கியமானதாக குறிப்பிடக்கூடியது குழந்தைகளுக்கான மானிய கொடுப்பனவு. தற்பொழுது நடைமுறையிலிருக்கும் இரண்டு வேறுபட்ட மானிய கொடுப்பனவு முறையை மாற்றி புதிதாக ஒரே கொடுப்பனவாக இந்த வருடம் ஆடி மாதத்தில் இருந்து வருமானவரி விலக்குள்ள மானியக் கொடுப்பனவாக மாற்றப்படவுள்ளது.

இதன்படி ஆண்டுக்கு $30,000 உட்பட்ட வருமானம் பெறும் குடும்பத்தினர்களுக்கு 6 வயதுக்குட்பட்ட குழந்தை இருந்தால் $6,400 ஆகக் கூடிய தொகையாக வருடத்துக்கு கிடைக்கும். 6 வயதிலிருந்து 17 வயதுக்குட்பட்டதாக இருந்தால் $5400 வரை கிடைக்கும். இதுதான் ஆகக்கூடிய தொகையாக அமைய இருக்கின்றது.

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் தேகப்பயிற்சி மற்றும் கலைகள் சம்மந்தமான கல்விக்கு கொடுக்கும் வரிச்சலுகை இல்லாமல் போக இருக்கின்றது. தற்பொழுது இது ஒரு பிள்ளைக்கு தேகப்பயிற்சிக்கு கட்டணம் வருடத்தில் $1000 செலவு செய்திருந்தால் $150 வரிச்சலுகை பெற்று வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வி கற்கும் மாணவர்களை பொறுத்தவரையில் மாணவர்களுக்கான மானியம் அதிகரிக்கப்பட இருக்கின்றது. தற்பொழுது $2000 மானியமாக பெற்றுவரும் குறைந்த வருமானம் உள்ள குடும்பத்தில் உள்ள மாணவர்கள் இனி $3000 டாலர்கள் பெறுவார்கள். பகுதிநேரமாக படிக்கும் மாணவர்கள் $800 லிருந்து $1200 பெறுவார்கள். மாணவர்களுக்கான அடுத்த முக்கிய விடயம் மாணவர்கள் தாம் பெற்ற கடன் தொகையை அவர்கள் வருமானம் $25,000க்குள் இருக்கும் வரைக்கும் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் இதற்கான வட்டி கணக்கிடப்படுமா இல்லையா என்பது முக்கியமானதாகும். இத்துடன் மாணவர்களின் பாடப்புத்தகங்களுக்காக வழங்கப்படும் வரிச்சலுகை நிறுத்தப்படுகின்றது.

வேலையிலிருந்து விலக்கப்பட்டவர்கள் பெறும் வேலையற்றோர் காப்புறுதிப்பணம் பெறுவதற்கான காத்திருப்புக் காலம் இரண்டு வாரத்தில் இருந்து ஒரு வாரமாக குறைக்கப்பட இருக்கின்றது. பழைய அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட குடும்ப வருமான வரிச்சலுகை (family tax cut) இந்த அரசாங்கத்தால் நிறுத்தப்படுகிறது.

இவ்வாறாக பல மாற்றங்கள் 2016ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டாலும் இவற்றில் கூடிய நன்மை நடுத்தர வருமானம் உடையவர்களுக்கு என அரசு கூறுகின்றது. நடைமுறையில் பல விடயங்கள் எடுக்கப்பட்டு வேறு வடிவத்தில் கொடுக்கப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.●


NKS Draperies & Blinds
210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420
• Vertical blinds
• Venetian blinds
• Draperies
• Curtains
• Shutters
உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட
அழையுங்கள்
கேதா
தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


SABESAN'S Choice
தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
“விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்”
Laminate, Mirror, Panel, Closet Droos
Carpet, Hardwood, Tiles, Granite Flooring
Windows + Doors, Kitchen + Bath
Renovation or NEW!!!!
Sabesan's Choice
416 605 1990



குரு அரவிந்தன்

# யூலியஸ் சீசர்

உலக வரலாற்றின் குறிப்பிடத்தக்க முக்கியமான தலைவர்களுள் யூலியஸ் சீசரும் ஒருவராவார். உரோம் பேரரசின் எழுச்சிக்கு முக்கிய காரணமாக இருந்த யூலியஸ் சீசர், சுபுரா என்ற உரோம நகரப்பகுதியில் வசித்த சாதாரண குடும்பத்தில் ஔரெலியா என்பவரின் மகனாக கி.மு.100வது ஆண்டில் பிறந்தார். பள்ளிப் பருவத்தில் கிரேக்கம், இலத்தீன் மொழிகளை நன்கு கற்றறிந்தார். படை வீரராக இணைந்த யூலியஸ் சீசர் மிதிலின் நகரின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார். இதைத் தொடர்ந்து கி.மு 60ஆம் ஆண்டில், கிராசஸ், பாம்பெ என்ற இருவருடன் ஒன்று சேர்ந்து உரோமில் மூவராட்சியை ஏற்படுத்தினார். இந்த அரசியல் கூட்டணி பல காலமாக உரோமானிய அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. மக்கள் விரும்பும் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் தமது அதிகாரத்தைத் தக்க வைப்பதே இவர்களது திட்டமாக இருந்தது. ஆனாலும் செனட் சபையில் உள்ள சிலர் பழமைவாதிகளுடன் இணைந்து இவர்களது திட்டத்தை எதிர்த்தனர்.

கி.மு 51இல் யூலியஸ் சீசர் கவுலில் (GAUL) பெற்ற வெற்றிகள் உரோமப் பேரரசை விரிவுபட உதவின. இதனால் உரோமின் ஆட்சியை ஆங்கிலக் கால்வாய் மற்றும் ரைன் ஆற்றங்கரை வரை கொண்டு செல்ல முடிந்தது. இவை இரண்டையும் கடந்து சென்ற முதல் உரோமின் படைத்தலைவராக சீசர் விளங்கினார். இந்த வெற்றியைத் தொடர்ந்து ரைன் ஆற்றை இலகுவில் கடப்பதற்காக அதன் மீது பாலத்தைக் கட்டி எழுப்பினார். படைகள் இலகுவாக ஆற்றைக் கடப்பதற்கு வழி கிடைத்ததால், பிரித்தானியா மீதான முதல் ஊடுருவலைச் சீசர் மேற்கொண்டார்.

யூலியஸ் சீசர் கொர்னெலி என்ற பெண்ணை கி.மு. 84ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார். கி.மு. 69ஆம் ஆண்டில் சீசரின் மனைவி கொர்னெலியா மரணமாகவே, கி.மு. 67ஆம் ஆண்டில் சுல்லாவின் பேத்தியான பொம்பெயாவைச் சீசர் திருமணம் செய்து கொண்டார். எகிப்து மீது படை எடுத்து எகிப்து நாட்டை ஆண்ட தொலமி என்பவருடன் போர் புரிந்து வெற்றி பெற்றார். இந்த யுத்தத்தில் தொலமி கொல்லப்பட்டதால், தொலமியின் மனைவியான கிளியோபத்ராவைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சிசேரியன் என்றொரு மகனும் உண்டு.



கி.மு 53ஆம் ஆண்டில் நடந்த கார்கெ போரில் மூவர்களில் ஒருவரான கிராசஸ் மரணமானார். கிராசசின் மரணத்திற்குப் பின்னர் பாம்பெ செனட் அங்கத்தவர்களுடன் ஒத்துழைக்கத் தொடங்கினார். இதைவிரும்பாத சீசர் பாம்பெயை எதிர்க்கத் தெடங்கினார். கவுலில் நடந்த போர் முடிவுற்றபோது செனட் சபையினர் சீசரை பதவி விலகி உரோமிற்குத் திரும்பி வரவேண்டும் என்று பணித்தனர். இதனை ஏற்க மறுத்த சீசர் கிமு 49ஆம் ஆண்டில் ரூபிகான் ஆற்றைக் கடந்து உரோமானியப் படைகளுடன் இத்தாலியை அடைந்தார். இதனால் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்களை அடக்கிய யூலியஸ் சீசர் உரோமின் சர்வாதிகாரியாக மாறினார்.

அரசின் கட்டுப்பாட்டைத் தனக்குள் வைத்திருந்த சீசர், சமூக, அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொண்டு, குடியரசின் அதிகாரங்களை மையப்படுத்தினார். நாட்களைக் கணிக்கும் கிரெகோரியன் நாட்காட்டி அறிமுகமாகும் வரை சீசர் உருவாக்கிய யூலியன் நாட்காட்டியே பாவனையில் இருந்தது. சீர்திருத்தவாதியாகவும் இலக்கியவாதியாகவும் விளங்கிய சீசரால் உருவாக்கப்பட்ட அடிமைகள் விளையாட்டு அரங்கம் மிகவும் புகழ் பெற்றதொன்றாகும். கிரேக்க வரலாற்றில் பெரும் வீரராகக் கணிக்கப்பட்ட யூலியஸ் சீசர் தனது வாழ்க்கை வரலாற்றை மட்டுமல்ல, தனது படையெடுப்புகளைப் பற்றிய நூலொன்றையும் எழுதியுள்ளார். பிற்காலத்தில் யூலியஸ் சீசரை மையமாக வைத்து வில்லியம் ே'க்ஸ்பியர், பெர்னாட்சா ஆகியோர் நாடகங்கள் எழுதியிருக்கின்றார்கள்.

சீசரின் சர்வாதிகாரப் போக்கினால் வெறுப்படைந்த, புரூட்டசின் தலைமையிலான செனட் உறுப்பினர்கள் யூலியஸ் சீசரைக் கொலை செய்யத் திட்டமிட்டு அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

கி.மு. 44 பங்குனி மாதம் 15ஆம் திகதி மார்கஸ் ப்ரூடஸ், சர்விலஸ் காஸ்கா, காசியஸ் லான்ஜினஸ் என பலர் இணைந்து, 55 வயதான சீசரைக் கத்தியால் குத்திக் கொன்றனர். அதனால் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகங்களை சீசரின் வளர்ப்பு மகனான ஓக்டோவியஸ் தனது திறமையால் அடக்கித் தனது ஆட்சியை அமைத்தார். இவரது ஆட்சியில் உரோமப் பேரரசு உருவாகத் தொடங்கியது..●

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan


EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

Graphic Land - 647. 219. 7576

## தமிழ்நாட்டில்..

அதிகபட்ச மக்கள் செல்வாக்குள்ள தனிநபர் என்ற பெருமையுடன் மறைந்தும் வாழ்கிறார்.

### தமிழ்நாட்டின் தேர்தலும் கட்சிக் கூட்டணிகளும்!

தற்போது தமிழ்நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளாக திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவையும், இந்திய பொதுவுடமைக் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி, இந்தியக் குடியரசுக் கட்சி, மார்க்கிசக் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், பாரதிய ஜனதா கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, தமிழர் மறுமலர்ச்சிக் கழகம், புதிய தமிழகம் கட்சி, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி, முஸ்லிம் லீக் ஆகியவற்றுடன் நாம் தமிழர் கட்சியும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை செலுத்தும் நிலையில் உள்ளன.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்களில் பல கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டி போடுவது வழமை. இம்முறையும் இப்படி பல கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன. மொத்தமுள்ள 234 ஆசனங்களில் சிலவற்றை உதிரிக் கட்சிகளுக்குப் பிரித்துக் கொடுத்து போட்டியிலிறங்குவது வழக்கம்.

ஜெயலலிதா தலைமையிலான அதிமுக கட்சியில் மேலும் 6 சிறிய கட்சிகள் இணைந்துள்ளன. அதிமுக 227 இடங்களிலும், ஏனைய 6 கட்சிகள் 7 ஆசனங்களைப் பகிர்ந்தும் போட்டியிடுகின்றன.

மு.கருணாநிதி தலைமையிலான திமுக கட்சியில் இந்திய காங்கிரஸ் உட்பட, 8 கட்சிகள் இணைந்துள்ளன. 141 இடங்களில் திமுகவும், 41 இடங்களில் காங்கிரசும், மீதி 19 இடங்களில் ஏனைய கட்சிகளும் போட்டியிடுகின்றன.

விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்துடன் பல கட்சிகள் இணைந்து, மக்கள் நலக் கூட்டணியாகவும், தமிழ்மாநில காங்கிரஸ் அணியையும் இணைத்து, பிரதான கட்சிக்கு 104 ஆசனங்கள், ஏனையவை பரவலாகப் பிரிக்கப்பட்டு போட்டியில் குதிக்கின்றன.


பாரதிய ஜனதாக் கட்சி கூட்டணியில் இந்திய ஜனநாயகக் கட்சி உட்பட, மூன்று கட்சிகள் இணைந்துள்ளன.

நாம் தமிழர் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி ஆகியன, 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுகின்றன.

தற்போதைய முக்கிய தேர்தல் விடயங்களாக, இந்தித் திணிப்பை எதிர்ப்பது, மீனவர் பிரச்சனை, அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது அரசின் பாராமுகம், லஞ்சம், ஊழல் போன்ற பலவும் தமிழ்நாட்டு அரசியல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப் படுகிறது.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, அதனால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களிடம் சென்ற ஊடகவியலாளர்கள் சிலர், வரப்போகின்ற தேர்தல் குறித்தும் வினாத் தொடுத்தனர். ஒரு பெண் அதற்குப் பதில் கூறுகையில், “வெள்ளப்பெருக்கோ அழிவோ சுனாமியோ எதுவும் எமது வாக்குப் பதிவில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை. எமது வாக்குக்கு வழமைபோல் யார் அதிகபட்ச பணம் தருகிறார்களோ அவர்களுக்கே எனது வாக்கு” என்று தெளிவாகப் பதிலளித்தார்.

காசும் பொருளும் கொடுக்கும் கட்சிகளையும் அரசியல்வாதிகளையும் கண்டிப்பதா அல்லது வாக்குகளை விற்றுப் பணம் பண்ணப் பழகிப்போன மக்களைக் கண்டிப்பதா? 60களிலிருந்தே தொடர்ந்து ஆட்சியமைக்கும் இரு பிரதான கட்சிகளும், மக்களின் வாக்குகளை, வணிக வர்த்தகப் பண்டமாற்றாக உருமாற்றியிருப்பதற்கு, ஜனநாயகம் வெட்கப்படக்கூடும்!●



YOUR PARTNER IN MORTGAGES

**Dirresh Krishna**, MBA, CMA, AMP
Mortgage Specialist (Lic #M08007487)
Tel: 416.819.4373
accent@rogers.com



**Ragavan (Raga) Ramanathan**, AMP
Mortgage Specialist (Lic #M13000685)
Tel: 416.579.7533
raga_ram@yahoo.com

316 - 885 Progress Ave., Toronto, Ontario. M1H 3G3
Tel.: 416.439.3333 • Fax: 416.439.3336

**ALL COUNTRIES TAMILS YELLOW PAGE**

**CANADA & INTERNATIONAL MEDIA, NEWS, WEBSITE BUSINESS ADVERTISEMENTS & DIRECTORY**

**BIRTHDAY WISHES & ANNIVERSARY :-** Wedding & Business
**ARANGETRAM :-** Bharatham, Mirudangam, Veena & Etc... - **MATRIMONIAL :-** Marriage Broker Services
**JOB AGENCY :-** All Kinds of Employment Services - **FUNERALS :-** Obituaries & Etc...

2296 EGLINTON AVE, EAST @ BIRCHMOUNT RD UNIT 3C LOWER LEVEL SCARBOROUGH - TORONTO - ONTARIO - M1K 2M2 - CANADA
TEL: 416 644 7273 - TEL & FAX: 416 613 2919 - MOB: 416 752 4444 WEB: WWW.TAMILSYELLOWPAGES.COM E-MAIL: TYP@TAMILSYELLOWPAGES.COM

**WWW.ENGLISHYELLOWPAGE.COM - WWW.ASIANSYELLOWPAGE.COM**

# அர்ச்சனாஸ் & கோ

அனைத்துவகை பூஜைப்பொருட்களின் களஞ்சியம்

பூஜைப்பொருட்கள்
மல்லிகைச்சரம்
பூக்கள் பூமாலைகள்
பரதநாட்டிய ஆபரணங்கள்
வீடியோ புகைப்படம்
திரைப்படங்கள் பாடல்கள்

All temple pooja items
Fresh jasmine and flower garlands
Dance items
HD Video & Photography
Passport photos

"உங்கள் இல்லம்தோறும் இறையருள் பெற"

**416-292-0033** **www.archanas.ca**

**2950 Kennedy Rd. Unit 6, Scarborough (One Block North of Finch)**

# >FOR SALE<

## Good for investors and first time buyers!

**$ 549,999**

**Markham / Tapscott**

**Good Size Family home with Four plus one bedroom**

Good Size Family home with Four plus one bedroom. Large Lot. Freshly Painted. Upgraded House. New Doors. New Windows. Finished Basement with separate entrance. Good for investors and first time buyers. Close to Schools, Mall, TTC,Medical center and Plaza.



**Scarborough**

## வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..

கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்

அடமான (Mortgage) ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்



2015 Rookie of the Year

2015 Platinum Club Award

## கமல் நவரட்ணம்

**Kamal** Navaratnam

Sales Representative

Direct: **416-671-4815**

E mail:kamalhomesale@gmail.com

**HomeLife/Future Realty Inc.**
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

***Trust and reliable services***




Dental Office

BRACE FOR A GREAT SMILE

**SCARBOROUGH**
Kennedy / Finch
3852 Finch Ave. East
Suite 204 & 303
Scarborough, ON
Tel: 416-292-7004
905-47 BRACE (27223)

**BRAMPTON / MISSISSAUGA**
Steeles / Hurontario
7920 Hurontario Street
Unit # 37
Brampton, ON
Tel: 905-457-1700

**MARKHAM**
Markham / 16th
(New Location)
9500 Markham Road
Unit # 107
Markham, ON
905-47 BRACE (27223)

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople

TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012

TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011

TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

No Franchise Fees No Monthly Fees No Desk Fees

## International Award Winning Office

## Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week

HOMELIFE HIGHER STANDARDS



**HOMELIFE /FUTURE REALTY INC., Brokerage**
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301